விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 020 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 23 திங்கட்கிழமை (08.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## எந்தத் தேர்தல் நடந்தாலும் வெற்றி பெறப்போவது நாமே

### அநுர குமார திஸாநாயக்க



(கம்பஹா)

நாட்டில் அடுத்து எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அதில் தேசிய மக்கள் சக்தியே வெற்றி யீட்டும் அதனூடாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை வீட்டுக்கு அனுப்பு வோம் என தேசிய மக்கள் சக்தி யின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க சூளுரைத்துள் ளார்.

கம்பஹா பிரதேசத் 15

## வடக்கின் சாதனையாளர்களை சந்தித்தார் ஜனாதிபதி



15

## ஜனாதிபதி ரணிலின் வடக்கு விஜயம்

# மக்களின் வரிப்பணத்தை வீணடித்த வெற்றுப் பயணம்

## எதிர்க்கட்சிகள் கிண்டல்

(கொழும்பு) ஜனாதிபதி ரணிலின் வடக்கு விஜயம் தேர்தலினை இலக்காகக் கொண்டு மக்களின் வரிப்பணத்தினை வீணடித்த வெற்றுப் பயணமே அன்றி, பிரச்சினைகளுடன் வாழும் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் பயணம் இல்லை என எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குக்கான விஜயத்தினை கடுமையாகச் சாடியுள்ளன.

(04ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தினத்துக்கு முன்னதாக தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குக



15

## போதைப்பொருளுக்குப் பதிலாக வலி நிவாரண மாத்திரைகள்

### எச்சரிக்கின்றனர் பொலிஸார்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் யுத்திய நடவடிக்கையினால் நாட்டில் போதைப்பொருளுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு அவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன.

இதன் விளைவாக போதை வஸ்துப் பாவனையாளர்கள் புதிய மாற்று வழிமுறைகளைக் கையாள ஆரம்பித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய 15

## அன்றாட உணவுத் தேவைக்காகவே கடன்படு நிலையில் 7 இலட்சம் குடும்பங்கள்

(கொழும்பு)

நாட்டில் கடன்பட்டுள்ள குடும்பங்களில் ஏறக்குறைய 7 இலட்சம் குடும்பங்கள் தமது அன்றாட உணவுத் தேவைக்காகக் கடன் பெற்றுள்ளதாக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். 15

## விசேட டெங்கு தடுப்பு வாரம்

### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

விசேட டெங்கு தடுப்பு வாரமொன்றை நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட 70 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை 15

## 1100 போதை மாத்திரையுடன் யாழ்ப்பாணத்தில் இருவர் கைது



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

B.Ed. கற்கைநெறியின் சகபாட ஆசிரியர் **யூட்டனிஸ்ரன்**
அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

## யோசப் ஜெயராஜன் (ராஜன்)

( ஓய்வுபெற்ற புனித வளனர் கத்தோலிக்க அச்சக ஒப்பு நோக்குனர் )

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



மண்ணில் : 04.04.1951
விண்ணில் : 03.01.2024

(18547)

**பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்**

**விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள்**
**B.Ed. 2022 /25 அணி, கோப்பாய் TTC**

---

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

மேலும் கணனி அனுபவம் உள்ள A/L முடித்த (ஆண்,பெண்) பில் கிளார்க் உடன் தேவை.

**077 748 8093**

(18549)

---

## வேலையாட்கள் தேவை

பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை.

♦**Waiter**

குறிப்பு: தூர இடங்களில் வசிப்போருக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (18544)

**077 407 8235, 077 712 3501**

---

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

---

### யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

மேற்படி எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 2024.01.21 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு கனகசிங்கம் மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. கடந்தகால செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகள், கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு, புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளது. இதில் சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர்

தலைவர், பழைய மாணவர் சங்கம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

(C-8895)

---

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி **ஜெ.சத்தியபாமா**
அவர்களின் அன்புத் தாயார்.

(18545)

திருமதி

## சின்னத்தம்பி குஞ்சம்மா

அவர்கள் நேற்று 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/புனித சாள்ஸ் ம.வி.

---

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு டச்சு வீதியில் GPS Lane அருகாமையில் 4 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. 20 அடிப்பாதையுடன் மெயின் றோட் முகப்புடன் உண்டு.
தரகர் தேவையில்லை.

பார்வையிடும் நேரம் : 6.00am - 6.00pm வரை

(18548)

**076 755 8606**
**077 874 3204**

---

# என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்...

17ம் ஆண்டு நினைவலைகள் — 12ம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **செல்லையா வீரசிங்கம்**

அமரர் திருமதி **வீரசிங்கம் இராசமணி**

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதருள் மாணிக்கமான புனித ஆத்மாக்களின் நினைவாக!!

இன்றைக்கும் என்றைக்கும் நீங்கள் எங்களின் நெஞ்சங்களில்!!! வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்!

*உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல எம் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் நமசிவாய!
சிவாய நம ஓம் !!


*தென்னாடுடைய சிவனே போற்றி!*
*என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி!!*
*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!*
*ஓம் நமசிவாய..*

**குடும்பத்தினர்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

(C-8896)

---

# கண்ணீர் காணிக்கை



அமரர் உயர்திரு **தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம்**

(ஓய்வுநிலை ஆய்வுகூட உத்தியோகத்தர்)

எமது பாடசாலையின் பழைய மாணவரும் பழைய மாணவர் சங்க நீண்ட கால உறுப்பினரும் தற்போதைய செயற்குழு உறுப்பினர் திரு.வி.கோபிநாதன் அவர்களின் தந்தையாரும் புத்தூர் சிவன் தேவஸ்தான அறங்காவலரும் எமது கல்லூரியின் தர்மகர்த்தா சபையின் நிரந்தர உறுப்பினரும் என பல பொறுப்புக்களுடன் எமது கல்லூரியுடன் இணைந்து செயற்பட்டு சிவபதமடைந்த உயர் திரு. தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சோமாஸ்கந்த பெருமானை இறைஞ்சுகின்றோம். இவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-8097)

மண்ணில் — விண்ணில் 06.01.2024

பழைய மாணவர் சங்கம்
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி-புத்தூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பேசத் தயார்

## ஐ.ம.ச பகிரங்க அறிவிப்பு

(கொழும்பு)

**அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார பகிரங்கமாக அறிவித்துள்ளார்.**



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியானது, நாட்டின் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள தரப்பாகும். அதுமட்டுமன்றி, சிறுபான்மைக் கட்சிகளும் சிறிய கட்சிகளும் எம்முடன் தொடர்ச்சியாக ஐக்கிய கூட்டணியில் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

அதேநேரம், தமிழ் அரசியல் கட்சிகள் தமது சார்பில் வேட்பாளரை நிறுத்துவதற்கு முழுமையான உரித்தினைக் கொண்டிருக்கின்றன. அதில் நாம் மாற்றுக்கருத்தினைக் கொண்டிருக்கவில்லை.

இருப்பினும், அத்தரப்பினரையும் எம்முடன் இணைத்து எமது பரந்துபட்ட கூட்டணியில் பங்களிகளாக்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். இன, மொழி, மத வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தை கட்டியெழுப்புவதற்காக நாம் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஆகவே, தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எம்மிலிருந்து விலகி நிற்கும் நிலைமையை தவிர்ப்பதற்காக நாம் அனைத்து தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்துவதற்கு தயாராகவே உள்ளோம்.

மேலும், நாட்டில் அனைத்து சமூகங்களுக்கும் சுபீட்சமான எதிர்காலம் ஒன்றை உருவாக்குவதாக இருந்தால் அனைவரும் ஒன்றிணைவது அவசியமாகும். அந்தச் செயற்பாட்டில் நாம் அனைவருடனும் கைகோர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

தெற்கில் மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதுபோன்று தான் வடக்கிலும் மக்கள் மாற்றத்தினை எதிர்பார்க்கின்றார்கள். அந்த மாற்றத்துக்கான தலைமையை ஐக்கிய மக்கள் சக்தி வழங்குவதற்கு தயாராகிவிட்டது. அதற்காக அனைவரது ஒத்துழைப்புக்களையும் பெறவுள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

## ஊழல்வாதிகளை பாதுகாக்கவே வற்வரி- சஜித் விசனம்

(கொழும்பு)

பெறுமதி சேர் வரி ஊழல்வாதிகளைப் பாதுகாக்கும் வரியாகும். கொள்ளையடித்தவர்களிடமிருந்து பணத்தை மீட்பதற்கு பதிலாக, அவர்கள் அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுகின்றனர் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம் வெளியிட்டார்.

மினுவாங்கொட நெதகமுவ கனிஷ்ட வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

"தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி ஊழல்வாதிகளைப் பாதுகாக்கும் வரியாகும். ஊழல் மிக்க ஆட்சியாளர்கள் ஒவ்வொரு துறையிலும் கொள்ளையடித்ததன் காரணமாகவே நாடு வங்குரோத்தடைந்தது.

இவ்வாறு கொள்ளையடித்தவர்களிடமிருந்து பணத்தை மீட்பதற்கு பதிலாக, அவர்கள் அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுகின்றனர். எனவே இந்த வற் வரியை ஊழல் நிறைந்த வரி என்று அழைக்கலாம்.

தற்போதைய ஜனாதிபதி ஊழல்வாதிகளின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டதால் ஊழல்வாதிகளை பாதுகாத்து வருகிறார். இதன் காரணமாக பொதுஜன பெரமுனவின் 134 பேரும் கூறுவதற்கு ஏற்ப கைப்பாவை போன்று அவர் செயற்படுகின்றார்.

செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளால் நமது நாட்டில் பொருட்களின் விலை அதிகரிப்பதால், 250 மில்லியன் ரூபாய் செலவிட்டு இலங்கை கடற்படைக் கப்பலை ஈடுபடுத்தி, இந்த ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் போராட தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி அண்மையில் தெரிவித்தார்.

உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகள் இருக்கும் போது இந்த வங்குரோத்து நாடு ஏன் இவ்வாறான செயலைச் செய்ய முன்வருகிறது என்பது ஆச்சரியமளிக்கிறது.

மாணவர்களுக்கு மதிய உணவைக் கொடுக்க முடியாத, பொருட்களின் விலையை குறைக்க முடியாத இந்த அரசாங்கம் ஹவுதி கிளர்ச்சியாளர்களை அடக்க 250 மில்லியன் செலவிட்டுள்ளது.

நாடு வங்குரோத்து நிலையில் இருக்கும் வேளையில் முன்னுரிமையளிக்க வேண்டிய பல விடயங்கள் இருந்த போதிலும் ஜனாதிபதி வேறு விடயத்தில் கவனம் செலுத்தியுள்ளார் என அவர் குற்றம் சாட்டினார். (நி-5)

## தாதியர் பயிற்சி நெறிக்கான நேர்முகத் தேர்வு 13 ஆம் திகதி

(கொழும்பு)

தாதியர் பயிற்சிக்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு தொடர்பான அனைத்து விபரங்களும் சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (https://www.health.gov.lk/) வெளியிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.


விண்ணப்பங்கள் அனுப்பப்பட்ட விண்ணப்பதாரர்கள் இணையத்தளத்தைப் பார்த்து, நேர்காணலின் திகதி, இடம் மற்றும் தொடர்புடைய அனைத்து விபரங்களையும் தெரிந்து கொள்ளுமாறு சுகாதார அமைச்சகம் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவித்துள்ளது.

2019/2020 க.பொ.த உயர்தர விஞ்ஞானம் மற்றும் கணிதப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த 4000 இற்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இம்மாதம் 13 ஆம் திகதி முதல் பெப்ரவரி 18 ஆம் திகதி வரை மாணவர் தாதியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கான முதற்கட்ட தகுதித் தேர்வு நேர்காணல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

## சுதந்திரக் கட்சியுடன் இணைந்து மீண்டும் களமிறங்கும் சந்திரிகா

(கொழும்பு)



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அதற்கமைய, சந்திரிகா பண்டாரநாயக்க அடுத்த வாரம் அரசியல் நடவடிக்கைக்காக நாடு திரும்பலாம் எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மறைந்த பண்டாரநாயக்கவின் நினைவேந்தல் நிகழ்விலும் அவர் பங்கேற்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வின் பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபையும் கூடும் என்று அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

## செய்தித்துளிகள்

### இலங்கையில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

புதுவருடத்தின் முதல் 4 நாட்களில் மாத்திரம் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி கடந்த முதலாம் திகதி முதல் 4 ஆம் திகதி வரையில் மாத்திரம் 25,619 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் மட்டும் 14 லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து முந்நூற்று மூன்று சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதுடன், இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை 23 லட்சமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் சுற்றுலாதாரிகளின் வருகை மூலம் பெருமளவு வருமானத்தை அரசு பெற்றுக் கொள்வது குறிப்பிடத்தக்கது. (நி-5)

### ஆட்டோவை பந்தாடிய ரயில்

(மாத்தறை)

காலி - மாத்தறை பிரதான வீதியின் ஹபராதுவ பகுதியிலுள்ள புகையிரத பாதையில் முச்சக்கர வண்டி - ரயில் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த விபத்தில் முச்சக்கர வண்டி சாரதி காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சாரதி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் முச்சக்கரவண்டியை கவனக்குறைவாக செலுத்தியதன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

### இஞ்சியின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இஞ்சியின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதாக இஞ்சி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதன்படி, 1 கிலோகிராம் இஞ்சி 2000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. அத்துடன், 1 கிலோ உலர் இஞ்சியின் விலை 3000 ரூபாவைத் தாண்டியுள்ளது.

இஞ்சிக்கு சந்தையில் காணப்படும் கேள்வியை பூர்த்தி செய்ய முடியாததால் இவ்வாறு விலை உயர்ந்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5)

### சிறைச்சாலையில் அதிகரிக்கும் நோயாளர்கள்

(கொழும்பு)

காலி சிறைச்சாலையில் 7 கைதிகள் காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்டு காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக காலி சிறைச்சாலை அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர், காய்ச்சலால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் உயிரிழந்தமைக்கு மூளைக் காய்ச்சலே காரணம் என பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாவேக்கு எதிராக போட்டியில் அசத்திய அசலன்க, மதுஷன்க

## ஆனாலும் இயற்கை அன்னை இலங்கைக்கு கைகொடுக்கவில்லை

சிம்பாவே அணிக்கு எதிராக ஆர்.பிரேமதாச சர்வ தேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் சனிக் கிழமை நடைபெற்ற முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சரித் அசலன்க துடுப்பாட்டத்திலும் டில்ஷான் மதுஷன்க பந்துவீச்சிலும் அசத் திய போதிலும் மழை குறுக் கிட்டதால் ஆட்டம் கைவிடப்பட் டது.

அப்போட்டியில் அபார சதம் குவித்து சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி களில் இந்த வருடம் சதம் குவித்த முதலா வது வீரர் என்ற பெருமையை சரித் அசலன்க பெற்றுக்கொண் டார்.

அதேவேளை, பதிலுக்கு சிம்பாவே துடுப்பெடுத்தாடிய போது 2 ஓட்டமற்ற ஓவர்கள் வீசி 2 ஆவது ஓவரில் 2 விக்கெட் டுகளை வீழ்த்தி டில்ஷான் மது ஷன்க எதிரணியை திக்பிர மிப்பில் ஆழ்த்தியிருந்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, உதவி அணித் தலைவர் சரித் அசலன்கவின் அபார சதத்தின் உதவியுடன் 50 ஓவர்களில் 9 விக்கெட்டு களை இழந்து 273 ஓட்டங் களைக் குவித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாவே 4 ஓவர்களில் 2 விக் கெட்டுகளை இழந்து 12 ஓட்டங் களைப் பெற்றிருந்தபோது மழை பெய்ய ஆரம்பித்ததால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

ஆனால், மழை தொடர்ச்சி யாக பெய்ததால் ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

இப் போட்டியில் இலங்கை யின் ஆரம்பம் சிறப்பாக அமைய வில்லை.

அணிக்கு மீள அழைக் கப்பட்ட அவிஷ்க பெர்னாண்டோ முதல் ஓவரிலேயே ஓட்டம் பெறாமல் ஆட்டம் இழந்தார்.

எனினும் 41 ஓட்டங்களைப் பெற்ற சதீர சமரவிக்ரமவுடன் 2 ஆவது விக்கெட்டில் 63 ஓட்டங் களையும் 24 ஓட்டங் களைப் பெற்ற ஜனித் லியன கேவுடன் 3 ஆவது விக்கெட்டில் 48 ஓட்டங் களையும் பகிர்ந்த அணித் தலைவர் குசல் மெண்டிஸ் 46 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார்.

அப்போது 13 ஓட்டங் களைப் பெற்றிருந்த சரித் அசலன்க, அதன் பின்னர் மத்திய மற்றும் பின் வரிசை வீரர்களுடன் இணைந்து இலங்கைக்கு 144 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து கடைசி ஓவரில் 9 ஆவதாக ஆட்டம் இழந் தார்.

மொத்த எண்ணிக்கை 185 ஓட்டங்களாக இருந்தபோது தசுன் ஷானக்க ஆட்டம் இழந் தார்.

அப்போது 52 ஓட்டங்கள் பெற்றிருந்த சரித் அசலன்க 10 ஓட்டங்களைப் பெற்ற மஹீஷ் தீக்ஷனவுடன் 7 ஆவது விக் கெட்டில் 23 ஓட்டங்களையும் 18 ஓட்டங் களைப் பெற்ற துஷ்மன்த சமீரவுடன் 8 ஆவது விக்கெட் டில் 52 ஓட்டங்களையும் பகிர்ந்தார்.

மிகவும் திறமையாகத் துடுப் பெடுத்தாடிய சரித் அசலன்க 95 பந்துகளை எதிர்கொண்டு 5 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 101 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ரிச்சர்ட் ஙக ராவா 39 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் பராஸ் அக் ரம் 58 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் டுகளையும் ப்ளெசிங் முஸரா பனி 62 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றி னர். (நி-5)

## மக்களின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் வடக்கு விஜயம் குறித்து மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் அரசியல் கட்சிகள் தமது விமர்சனத்தை முன்வைத்துள் ளன.

இதில் ஜனாதிபதியின் வடக்கு விஜ யம், மக்களின் வரிப் பணத்தை வீண டித்த வெற்றுப் பயணமாகவே அமைந் துள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பி னர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய மக் கள் சக்தியின் கட்சி தலைமையகத் தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் அடிப்படை வசதிகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளன. இந்த நெருக்கடி நிலையிலேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். காணி விடுவிப்பு, மீள்கட்டுமானம், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வு, மற்றும் அரசியல் பிரச்சினைக் கான தீர்வு என்று தமிழ் மக்கள் பல் வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இவ்வாறான ஒரு நிலையில் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க ஒரு துண்டு காணியையேனும் அந்த மக்களுக்கு விடுவித்துக் கொடுக்கவில்லை. நான் கொழும்பிலிருந்து வருகை தரும் போது வடக்கு அதிகாரிகள் சிலருடன் கதைத்தேன். ஜனாதிபதி விஜயம் எவ்வாறு இருந்தது என்று அவர்கள் வாகனப் பவனியைக் கண்டு இரசித் தோம் என்று கூறினார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் யாழ். விஜயத்தை எதிர்த்து யாழ். மாவட்ட செய லகத்துக்கு அருகாமையில் போராட்டம் நடைபெற்றது.

ஜனநாயக வழியில் தமது எதிர்ப்பை தெரிவித்த போராட் டக்காரர்களைப் பொலிஸார் இழுத்துச் சென்றதையும் தாக்குதலுக்கு தயாராக இருந்த பொலி ஸாரையும் ஊடகங்கள் ஊடாகப் பார்த் தேன். நாட்டை அதலபாதாளத்துக் குக் கொண்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி கதிரையில் இருந்து மக்கள் விரட்டியடித்தபோது ரணில் விக்கி ரமசிங்க பின் கதவால் ஜனாதிபதியா னார். நாட்டை முன்னேற்ற போகி றேன் எனக் கூறிக் கொண்டு நாட்டு வளங்களை வெளிநாடுகளுக்குத் தாரைவார்க்கும் செயற்பாட்டில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார்.

வட மாகாணத்திலுள்ள பூநகரி மற் றும் தீவகம் வெளிநாடுகளுக்கு விற் பனை செய்யப்பட்டு விட்டன என்றும் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.


இதேவேளை பல்வேறுபட்ட பிரச் சினைகளுக்கான தீர்வைப் பெற்றுத் தரும் பயணமாக ஜனாதிபதியின் இப் பயணம் அமையும் என்று தாம் எண் ணியதாகவும் ஆயினும் இது சம்பிர தாயபூர்வமான பயணமாகவே அமைந் தது என தமிழ்க் கட்சிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை ஜனாதிபதியின் குறித்த விஜயமானது தேர்தலை மாத்திரம் இலக்காகக் கொண்டு இடம்பெற்ற தாக ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் சாடியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ந-7)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சிவநேசன்

(ஓய்வுபெற்ற ஆண் பரிசாரகர், கோட்டைக்காடு வைத்தியசாலை)



தோற்றம் : 08.10.1943 | மறைவு : 07.01.2024

*யாழ்ப்பாணம், வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவநேசன் (ஓய்வுபெற்ற ஆண் பரிசாரகர், கோட்டைக்காடு வைத்தியசாலை) அவர்கள் நேற்று (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரவநாதர் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, குணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராஜகோபால் மற்றும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, தங்கேஸ்வரி, கிருஷ்ணராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவரூபன் (கணித ஆசிரியர் - தனியார் கல்வி நிறுவனம்), சிவச்செல்வன் (பௌதிகவியல் ஆசிரியர் - யா/விக்ரோறியாக் கல்லூரி), சிவநாதன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நளினி (பண்ணாகம்), வாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - காரைநகர் பிரதேச சபை), மந்தாயினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவானுஜன், சரண்ராஜ், கஜானன், யர்சிகன், சிவாதிகா, கேசிகன், விகாஷ் (அமெரிக்கா), நிதீஷ் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2024) திங்கட்கிழமை காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (தொல்புரம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

*தகவல் : குடும்பத்தினர்*

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

தொ.பே : 077 538 9756 (மகன்)
[illegible] (மகன்)

(C-8098)



## துயர் பகிர்கின்றோம்

எமது **BARATHY** கல்வி நிறுவனத்தின்
சிரேஷ்ட கணித பாட ஆசிரியர்
திரு.S.சிவரூபன் அவர்களின் பாசமிகு தந்தை



அமரர் **வேலுப்பிள்ளை சிவநேசன்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு
நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-8101)

இயக்குநர், ஆசிரியர்கள்
பணியாளர்கள், மாணவர்கள்
BARATHY கல்வி நிறுவனம், சித்தன்கேணி.

[illegible] கல்லூரி
யாழ்ப்பாணம் - சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்
# அடுத்தவாரம் பாராளுமன்றத்தில்

(கொழும்பு)

திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2024 ஆம் ஆண்டுக்கான முதலாவது பாராளுமன்ற அமர்வு எதிர்வரும்9 ஆம் திகதி முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.


கடந்த டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய பாராளுமன்ற விவகாரக்குழு இதனை தீர்மானித்திருந்தது.

அதன்படி, எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் 10.30 வரை வாய்வழி வினாவுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்போது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கச் சட்ட மூலத்திற்கான அலுவலகம் ஸ்தாபிக்கும் திருத்தச்சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு, தேசிய நீரியல் திருத்தச்சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதங்கள் இடம்பெறவுள்ளன. (நி-5)

## சட்டவிரோத மணல் அகழ்வு
## டிப்பர்களுடன் சிக்கிய சாரதிகள்

(தருமபுரம்)



கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு மற்றும் மயில்வாகபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 5 டிப்பர் வாகனங்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய வீதி சோதனைகளின் மூலம் குறித்த கைது இடம்பெற்றுள்ளது.கைது செய்யப்பட்ட சாரதிகள் பொலிஸ் விசாரணைகளின் பின்பு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-5-316)



மடு மாதாவிற்கு மணிமுடி சூடிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடு மாதாவின் திருச்சொரூபம் மன்னார் மறைமாவட்ட பங்குகளுக்கு திருப்பயணமாக எடுத்துச் செல்லும் நடவடிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மடு திருத்தலத்தில் இருந்து ஆரம்பமானது. (படம்-யோசப்நயன்)

# ஒக்டோபர் 17 இற்கு முன் ஜனாதிபதித் தேர்தல்

## பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு அரசியல் கட்சிகள் முன்வைக்கும் கொள்கை பிரகடனங்களுக்கு பொதுவான கட்டமைப்பைத் தயாரிப்பது குறித்து அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டிஆரச்சி தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் முதன்முறையாக வாக்களிக்கும் வாக்காளர்களை இலக்கு வைத்து தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து தற்போது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாகவும் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார். (நி-5)

## குற்றவாளிகளை அடையாளம் காண கட்டுநாயக்கவில் விசேட கருவி

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குற்றவாளிகளை அடையாளம் காணும் வகையில் விசேட சோதனைக் கருவி பொருத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

"தானியக்க முக அடையாளப்படுத்தல" கருவியான இது விமான நிலையத்திற்குள் உள்வரும் மற்றும் வெளியேறும் பயணிகளுள் குற்றவாளிகளை அடையாளம் காணும் என தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ்துறை அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ் பதில் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரின் பணிப்பின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## ஆறு மாதங்களுக்கு நிறுத்தப்படும் வடக்கிற்கான தொடரூந்து சேவைகள்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்திற்கான தொடரூந்து சேவைகள் ஆறு மாத காலத்திற்கு நிறுத்தப்படும் என புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹவ மற்றும் அநுராதபுரத்துக்கிடையிலான பாதை அபிவிருத்திக்காகவே 6 மாதங்களுக்கு மூடப்பட்டிருக்கும் என தொடரூந்து பிரதி பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, நேற்று முதல் கொழும்பிலிருந்து மஹவ வரையும் அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரையுமே தொடரூந்து சேவைகள் இடம்பெறுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# இராசிபலன்

08.01.2024
மார்கழி 23, திங்கட்கிழமை
துவாதசி முன்னிரவு 9.56 மணிவரை
அனுசம் முன்னிரவு 8.18 மணிவரை

சுபநேரம் -12.32-2.02 மணிவரை
இராகுகாலம்-8.02-9.32 மணிவரை

சந்திராஷ்டமம்
அச்சுவினி,பரணி.

வளவன்




மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.




தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.




பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.




பலரது அன்பிற்கு பாத்திரமாவீர்கள், திடீர் பணவரவால் சந்தோசப்படுவீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.




நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன்தொல்லைகள் குறையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பெற்றோர் வழியில் அனுகூலமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.




உறவினர் பகை அகலும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.




திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் எண்ணியபடியே கைகூடும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும்.




சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள், பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.




உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும்.




அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணத்தால் பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.




திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும்.

இன்றைய பணியை இன்றே செய்வோம். அது தான் சிறந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சிவத்தமிழ் அன்னையின் 99 ஆவது பிறந்ததின அறக்கொடை விழா நேற்று ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் சான்றாண்மை மிக்கவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கும் உடுவில் கல்வி கோட்ட பிரிவில் உள்ள 50 மாணவர்களுக்கும் உதவித் தொகை வழங்கி வைக்கப்பட்டன.

(படங்கள்:-சிவசாந்தன்)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பம்



(கரணவாய்)

அதிகரித்து வரும் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பல இடங்களில் முன்னெடுக்கப்பட்டன.

டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்ட இம் மாதத்தில் ஒவ்வொரு கிராமங்களிலும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-60-285)

# பொலிஸாரின் அடாவடித்தனத்தை கண்டித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவியினை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில் பொலிஸாரின் அடாவடித்தனத்தினை கண்டித்து இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பாரிய போராட்டத்தினை மேற்கொள்ளவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி மரிய சுரேஷ் ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவியினை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில் தொடரும் பொலிஸாரின் அடாவடித்தனத்தினை கண்டித்து இந்த போராட்டத்தினை நடத்தவுள்ளோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை பொலிஸார் அடக்குவதையும் நிறுத்த வேண்டும். இதில் தேசியத்திற்காக பயணிப்பவர்கள், அரசியல் பிரதிநிதிகள், அமைப்புக்கள் என அனைவரும் அணி திரண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார். (நி-5-299)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது-வாகனம் மீட்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரியில் சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மணல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி பூநகரி 4 ஆம் கட்டைப் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மணல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட ஜேசிபி இயந்திரம் கைப்பற்றப்பட்டது.


கிளிநொச்சி குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்களும் வாகனங்களும் பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5-350)

# காட்டு விலங்குகளால்

## விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

### கவலை வெளியிட்ட விவசாயிகள்



(கண்டாவளை)

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் மற்றும் ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் காட்டு யானைகளின் தொல்லைகளாலும் பகல் வேளைகளில் குரங்குகளின் தொல்லை காரணமாகவும் தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதிருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் எழுபது வீதத்துக்கு மானோர் விவசாயத்தை வாழ்வாதாரத் தொழிலாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர். தற்போது நெற்செய்கையை விட மேட்டு நிலச்செய்கைகளும் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்ச்செய்கைகள் யானை, குரங்கு போன்ற காட்டு விலங்குகளால் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால் பாரிய அளவில் நட்டத்தை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-315)

# உவர்நீர் தடுப்பணையை

## புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி கிராஞ்சி பகுதியில் உள்ள பண்டாரமிடுக்கு பகுதியில் சேதமடைந்துள்ள உவர்நீர் தடுப்பணையை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி பண்டாரமிடுக்குப் பகுதியில் காணப்படுகின்ற உவர்நீர் தடுப்பணையானது சேதமடைந்துள்ளதாகவும் மழைகாலங்களிலும் கடல்நீர் பெருக்கெடுக்கின்ற காலங்களிலும் விவசாய நிலங்களுக்குள் உவர்நீர் உட்புகும் நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டி உள்ள விவசாயிகள் குறித்த தடுப்பணையை புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த உவர்நீர் தடுப்பணை அமைக்கப்படாத விடத்து ஏற்கனவே விவசாயம் செய்து வரும் பகுதிகளிலும் இவ்வாறு உயர் பாதிப்புகள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (நி-5-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாச நோய்களுக்கான மருந்துகளுக்கு தட்டுப்பாடு

## நோயாளர்கள் கடும் அவதி

(கொழும்பு)

**அரச வைத்தியசாலைகளில் சுவாச நோய்களுக்குத் தேவையான பெரும்பாலான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நோயாளர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

தற்போது நிலவும் காலநிலையினால் ஆஸ்துமா, சுவாச அமைப்பு தொடர்பான நோய்த் தொற்றுகள் உள்ளிட்ட சுவாச நோய்கள் அதிகரித்து வருவதாக குறித்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் சுவாச நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-5)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் நிட்டம்புவ பிரதேசத்தை சேர்ந்த 38 வயதுடையவர் ஆவார்.

இவர் நேற்று அதிகாலை துபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அதன் பின்னர், அங்கு மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது சந்தேகநபரின் இரு பயணப் பொதிகளிலிருந்து 156 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (நி-5)

## வீதி விபத்துக்களால் ஒரு நாளில் ஐவர் பலி

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் நடந்த வீதி விபத்துகளில் இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துக்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எல்பிட்டிய - அம்பலாங்கொட வீதியில் 9 ஆவது மைல்கல் அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று, கெப் வண்டியுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மற்றும் பின்னால் சென்ற இரு வரும் காயமடைந்து எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் பத்தேகம பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடைய ஆணும் 38 வயதுடைய பெண்ணும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பு - நீர்கொழும்பு வீதியின் துடெல்ல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று கெப் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஜாஎல பிரதேசத்தில் வசிக்கும் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கிரானேகம, வட்டகல சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 31 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதி விபத்துகள் ஒரு நாளில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## அதிகரிக்கும் தன்னிச்சையான கைதுகள்

### சட்டத்தரணிகள் சங்கம் விசனம்

(கொழும்பு)

அண்மைக்காலமாக அதிகரித்துவரும் தன்னிச்சையான கைதுகள், முறையான பிடியாணைகள் இன்றி பொலிஸ் சோதனைகள் மற்றும் சட்டத்திற்கு புறம்பான கொலைகள் குறித்து ஆழ்ந்த கவலை அடைவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டின் நீதி அமைப்பில் பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கும் வகையில் அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் பொறுப்புக்கூறல் மற்றும் சட்ட நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றின் அவசியமும் இதன்போது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அனைத்து மக்களும் நீதியான மற்றும் சமத்துவமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைய வேண்டும் என்றும் சட்டம் உரிய முறையில் பின்பற்ற வேண்டும் என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-5)

## விடுமுறை நாட்களிலும் பருவச்சீட்டுகள் செல்லுபடியாகும்

### இ.போ.ச தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பருவச் சீட்டுகள் விடுமுறை நாட்களிலும் செல்லுபடியாகும் என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

புத்தாண்டில் ஜனவரி மாதத்திற்கான பருவச் சீட்டுக்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பயணம் செய்ய முடியாத வகையில் வழங்கப்பட்டன.

எனவே பெப்ரவரி மாதம் முதல் விடுமுறை நாட்களிலும் பாடசாலை மாணவர்களுக்கான பருவச்சீட்டுக்கள் செல்லுபடியாகும் வகையில் வழங்கப்படும் என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்தார். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 700 | 700 | 600 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1300 | 1300 |
| தக்காளி | 500 | 600 | 550 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 140 | 150 |
| கோவா | 400 | 500 | 500 | 600 |
| கரட் | 650 | 800 | 950 | 1000 |
| பூசணி | 120 | 120 | 160 | 200 |
| புடோல் | 350 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 250 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 400 | 400 | 450 | 480 |
| பாகற்காய் | 800 | 1000 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 300 | 240 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 400 | 450 |
| லீக்ஸ் | 450 | 400 | 450 | 500 |
| பீற்றூட் | -- | 800 | 750 | 800 |
| கறிமிளகாய் | 600 | 600 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 400 | 400 | 450 | 450 |
| கத்தரிதம்புள்ள | 700 | 500 | 700 | 580 |
| கீரை - 1 பிடி | 160 | 160 | 200 | 250 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 850 | 800 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 800 | 700 | -- |
| முள்ளங்கி | 200 | 250 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 | 120 |


மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி.
பி.ஜெயரட்ணராஜா
அதிபர், யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

08.01.2024 இன்று அதிபர் பணியில் இருந்து ஓய்வுபெறும் அதிபர் திருமதி. பி.ஜெயரட்ணராஜாவிற்கு எமது மணிவிழா வாழ்த்துக்களையும் பிறந்ததின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Best Wishes

(C-8891)

வாழ்த்துவோர்:
கோட்டக் கல்விப் பணிப்பாளரும் அதிபர்கள் சங்கமும், கோப்பாய்க் கல்விக்கோட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-ரஷ்யா இடையிலான நட்புறவு நிலையானதாகவுள்ளது




(மொஸ்கோ)

உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டாலும் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நட்புறவு நிலையானதாக உள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், மொஸ்கோவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.


இவ்விடயம் குறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்,

"இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நட்புறவு பல வழிகளிலும் விதிவிலக்கானது. இந்த உறவில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை.

இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் ஒத்துழைப்பை விரிவுபடுத்த பங்களிக்குமாறு மொஸ்கோவிலுள்ள இந்திய சமூகத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த 70/80 ஆண்டுகளில், உலக அரசியலில் இந்தியாவும் ரஷ்யாவும் நிறைய மாற்றங்களைச் சந்தித்துள்ளன.

பாதுகாப்பு, அணுசக்தி மற்றும் விண்வெளி என்பவற்றில் அதிக நம்பிக்கை கொண்ட நாடுகளுடன் ரஷ்யா முன்னெடுக்கும் ஒத்துழைப்பு அதன் தரத்தைப் பிரதிபலிக்கிறது." எனத் தெரிவித்தார். (நி-5)

# இஸ்ரேலிய கப்பல் மீது ஆளில்லா விமானத் தாக்குதல்



(மாலே)

மாலைதீவு கடற்பரப்பில் இஸ்ரேலுக்கு சொந்தமான இரண்டு எண்ணெய் கப்பல்கள் ஆளில்லா விமானத்தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாலைதீவின் வடக்கு மற்றும் வடமேற்கு கடற்பரப்பிலேயே இந்த ஆளில்லா விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த எண்ணெய் கப்பல்கள் பப் அல்மன்டாப் நீரிணை மற்றும் செங்கடலை கடந்து பயணிக்க திட்டமிட்டிருந்தன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

பப் அல்மன்டாப் நீரிணையிலிருந்து 2000 கிலோமீற்றர் தொலைவில் இந்த ஆளில்லா விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. மீண்டும் தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக கப்பல்கள் தங்கள் பயணப் பாதையை மாற்றியுள்ளன. (நி-5)

# மனித... தகுதி...

## ஐ.நா மனிதாபி...


(நியூயோர்க்)

இஸ்ரேல் - காசா போ... தற்போது மனிதர்கள்... என ஐ.நா மனிதாபிம... தெரிவித்துள்ளார்..



# பூட்டானின் வடகிழக்குப் பகுதியை ஆக்கிரமிக்க சீனா திட்டம்

## வெளிவந்த செயற்கைகோள் புகைப்படம்



(பீஜிங்)

பூட்டானின் வடகிழக்கு பகுதியில் ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கு சீனா திட்டமிட்டு வருவது செயற்கைகோள் படங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

உலக அளவில் அமெரிக்காவுடன் மோதல் போக்கை கடைப்பிடித்து வரும் சீனா, ஆசியாவில் யாராலும் அசைக்க முடியாதவல்லமை பொருந்திய நாடாக உருவெடுக்க வேண்டும் என்ற கனவுடன் வலம் வந்து கொண்டிருக்கிறது.

அத்தோடு, தெற்காசிய நாடுகளை தனது கட்டுக்குள் வைத்திருக்கும் சீனாவிற்கு இந்தியா கடும் சவாலாக காணப்படுகிறது.

இந்நிலையில், தற்போது சீனா, பூட்டானில் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது தெரியவந்துள்ளது.

அதன் போது, பூட்டானின் வடகிழக்கு பகுதியில் சட்ட விரோதமாக ஊடுருவ முயற்சி மேற்கொண்டு வருவது செயற்கை கோள் படங்கள் மூலம் அம்பலமாகியுள்ளது. குறித்த படங்களில் பூட்டானின் கேன் பஜோங் பிராந்தியத்தில் உள்ள பேயுல் ஆற்று பள்ளத்தாக்கில் நகர குடியிருப்புகளை சீனா அமைத்து வரும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

அத்தோடு, 8 லட்சம் மக்கள் மட்டுமே வாழ்கின்ற பூட்டானை சுரண்டி ஆக்கிரமிப்பதன் மூலம் இந்தியாவுக்கு பூகோள ரீதியாக நெருக்கடி கொடுக்க சீனா முயற்சிப்பதாக சர்வதேச வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# இஸ்ரேல் மீது ஏவுக... மேற்கொண்ட ஹிஸ்...



(பெய்ரூத்)

லெபனானில் வைத்து ஆளில்லா விமானத்தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் துணைத்தலைவர் ஷேக் சலே அல் அரூரியைக் கொன்றதற்கு பதிலடி நடவடிக்கையாக ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீது நேற்று முன்தினம் ஏவுகணை தாக்குதலை நடத்தியுள்ளது.

சுமார் 60 ஏவுகணைகளை ஹிஸ்புல்லா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரிதர்கள் வாழ்வதற்கு ...தியற்ற இடமான காசா

## ...தாபிமான உதவிகள் குழுவின் தலைவர்

...)

**...காசா போர் தொடங்கி 90 நரக நாட்கள் கடந்துவிட்டன. காசா ...ரிதர்கள் வாழ்வதற்குத் தகுதியில்லாத இடமாக மாறிவிட்டது ...ரிதாபிமான உதவிகள் குழுவின் தலைவர் மார்டின் க்ரிஃபித்ஸ் ...ளார்.**





ஹமாஸ் - இஸ்ரேல் போர் ஆரம்பமாகி மூன்று மாதங்கள் நிறைவடைந்துவிட்டன. இந்நிலையில் தற்போதும் அங்குள்ள மக்கள் அன்றாடம் உயிருக்கு ஆபத்தான சூழலில் வாழ்கின்றனர்.

ஆனால் இந்த உலகம் அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. உடனடியாக போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

மனிதாபிமான உதவிகளைச் செய்யச் சொல்வோருக்கும் 20 இலட்சம் மக்களுக்கு உதவுவது என்பது பெரும் சவாலாக உள்ளது.

இதுவரை ஐ.நா உதவிக் குழுவைச் சேர்ந்த 142 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் போர் தொடங்கியிருக்கவே கூடாது. இப்போது இதனை முடிக்கும் காலம் நெருங்கிவிட்டது.

உடனடியாகப் போரை நிறுத்த வேண்டும். காசா மக்களுக்காக மட்டுமல்ல இனிவரும் சந்ததிகளை மனதில் கொண்டும் போரை நிறுத்த முற்பட வேண்டும்.

இந்த 90 நாட்களும் நரக நாட்களே. நடந்தவை எல்லாமே மனிதாபிமானத்தின் மீதான தாக்குதல்கள் மட்டுமே.

அனைத்துத் தரப்புகளையும் ஒன்றிணைத்து சர்வ தேசசட்டத்தின் கீழ் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

அப்பாவி பொதுமக்கள் பாதுகாக்கப்பட்டு அவர்களின் அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அனைத்து பணயக் கைதிகளும் நிபந்தனைகளின்றி விடுவிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (நி-5)

# ...வுகணை தாக்குதலை ...ஹிஸ்புல்லா அமைப்பு



அமைப்பினால் ஏவப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

"சிறந்த தலைவரான ஷேக் சலே அல் அரூரியைக் கொலை செய்த குற்றத்திற்காக பதிலடி கொடுக்கவுள்ளோம்.

அதில் முதன்மைத் தாக்குதலாக இஸ்ரேலின் மெரோன் வான் கட்டுப்பாட்டு தளத்தைக் குறிவைத்து 62 பலவகைப்பட்ட ரொக்கெட்டுகளை ஏவியுள்ளோம்" என ஹமாஸின் ஆதரவு அமைப்பான ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஹிஸ்புல்லா தலைவர் ஹாஸன் நஸ்ரல்லா "விரைவில் இதற்கான பதிலடி கொடுக்கப்படும்" என இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.


கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 முதல் தொடங்கியிருக்கும் இந்தப் போரில் இஸ்ரேல் லெபனான் எல்லையில் அடிக்கடி தாக்குதல்கள் நடைபெற்றபடி உள்ளன. அது பெரும்பாலும் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையேயான சண்டையாக இருக்கிறது.

கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக தொடரும் இந்தத் தாக்குதல்களில் லெபனானில் 129 ஹிஸ்புல்லா போராளிகள் உட்பட 175 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதில் 3 பத்திரிகையாளர்களும் அடங்குவர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (நி-5)

# உலகின் உயரமான கட்டடம் என்ற அந்தஸ்தை இழக்கவுள்ள புர்ஜ் கலீபா

(ரியாத்)

துபாயில் உள்ள புர்ஜ் கலீபாவை விட உயரமான கட்டடத்தை சவூதி அரேபியா கட்டி வருகிறது. சவூதி அரேபியாவில் 1.5 பில்லியன் டொலர் செலவில் இந்த புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.



துபாயில் உள்ள புர்ஜ் கலிபா கட்டடம் 828 மீற்றர் உயரத்தில் உள்ளது. மனிதனால் உருவாக்கப்பட்ட உலகின் மிக உயர கட்டடம் என்ற பெருமை இந்த கட்டடத்திற்கு உள்ளது.

2717 அடி உயரம் கொண்ட உலகிலேயே உயரமான கட்டடமான புர்ஜ் கலிபா 2004 இல் கட்டத் தொடங்கப்பட்டு 2009 இல் கட்டி முடிக்கப்பட்டது. உலகெங்கிலும் இருந்து பலர் தினமும் இதை காண துபாய்க்கு சுற்றுலா வருகின்றனர்.

இந்த நிலையில் இதை விட உயரமாக ஜித்தா கோபுரம் என்ற கட்டடத்தை சவுதி அரேபியா உருவாக்கி வருகிறது. இந்த கட்டடம் 1000 மீற்றர் உயரம் என்றும் 167 மாடிகள் கொண்டது என்றும் கூறப்பட்டு வருகிறது.

ஜெட்டாவின் வடக்கே, ஜெட்டா எக்னாமிக் சிற்றி எனும் திட்டத்தின்படி உருவாகும் நகர மேம்படுத்தலில் கிங்க்டம் டவர் என்றும் அழைக்கப்படும் ஜெட்டா டவர் கட்டப்பட்டு வருகிறது. இதுவரை உலகில் இல்லாத கட்டடக்கலை வேலைப்பாடுகள் மற்றும் நுணுக்கங்களுடன் இது கட்டப்பட்டு வருகிறது. இந்த கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் "உலகின் உயரமான கட்டடம்" எனும் அந்தஸ்தை புர்ஜ் கலிபா இழக்கும். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2024



சேமித்து வைப்பதில் தேனீக்களைப் போலவும், செலவழிப்பதில் ஒட்டகத்தைப் போலவும் குணம் கொண்ட நீங்கள், சரியென பட்டதையே செய்வீர்கள். சகதியில் கல்லை விட்டெறிந்தால் அது தன் மேலேதான் தெறிக்கும் என்பதை உணர்ந்த நீங்கள் கெட்ட நண்பர்களை அறவே ஒதுக்கிவிடுவீர்கள். உங்கள் இராசிக்கு 9 ஆவது இராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் முடங்கியிருந்த நீங்கள், விஸ்வரூபம் எடுப்பீர்கள். எதிர்பார்த்து காத்திருந்த தொகை கைக்கு வரும். எந்த காரியத்தை தொட்டாலும் ஆரம்பம் நன்றாக இருந்தது, ஆனால் முடிவுகள் மோசமாக இருந்ததே என்று வருந்திய நிலைமாறும். பிள்ளைகளால் கவலைகளும், செலவுகளும் வந்த நிலை மாறி, இனி அவர்களால் மரியாதை கூடும்.

குருபகவான் உங்கள் இராசிக்கு 5 ஆம் வீட்டில் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் நினைத்த காரியம் நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வரும். வீடு, மனை வாங்குவீர்கள். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும். சில பிரச்சினைகளுக்கு எதார்த்தமான முடிவுகள் எடுப்பீர்கள். குழப்பங்கள் நீங்கி, குடும்பத்தில் அமைதி நிலவும். கிரஹப்பிரவேசம், திருமணம், சீமந்தம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு கூடும். அவர்களின் சாதனைகள் மிகவும் உயர்வாகப் பேசப்படும். மகளுக்கு வெகுநாட்களாக தேடி அலைந்த வரன் பார்க்கும் படலம் இப்போது முடியும். நல்ல மணமகன் வந்தமைவார். அநாவசிய செலவுகளைகட்டுப்படுத்துவீர்கள்.

உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பால், பூர்வீக சொத்து பிரச்சினைக்கு முடிவு வரும். சொந்த ஊரில் மதிப்பு மரியாதை கூடும். தாயாரின் உடல் நலம் சீராகும். பழைய உறவினர்கள் தேடி வந்து பேசுவார்கள். அக்கம் பக்கத்தினரிடம் அளவாகப் பேசிப் பழகவும். குடும்பப் பிரச்சினைகளை அடுத்தவர்களிடம் கூறுவதை நிறுத்தினால் நன்மை உண்டாகும். கர்ப்பிணிகள் அதிக பாரம் சுமக்கக் கூடாது. வாகன ஓட்டிகள் அதிக எச்சரிக்கையுடன் வாகனத்தில் செல்ல வேண்டும். சாலையைக் கடக்கும்போது அலைபேசியில் பேசிக் கொண்டும் பாட்டு கேட்டுக் கொண்டும் செல்வதைத் தவிர்க்க வேண்டும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் இறங்கலாம். புதிய படிப்பு படிப்பதிலும் ஆர்வம் வரும்.

வேலையில்லாதவர்களுக்கு கைநிறைய சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்கும். தாய்மாமன் வகையில் உதவிகள் கிடைக்கும். பாதியில் முடங்கிக் கிடந்த வீடு கட்டும் பணி முழுமையடையும். மூத்த சகோதரர், சகோதரிகளுடன் இருந்து வந்த பனிப்போர் நீங்கி, பாசமழை பொழிவார்கள். கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். குருபகவான் 1.5.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் இராசிக்கு 6 ஆம் வீட்டில் சென்று மறைவதால் வீண் டென்ஷன், விரயம், ஏமாற்றம், மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். கணவன் - மனைவிக்குள் சந்தேகம், விவாதங்கள் வந்து போகும்.

பணத் தட்டுப்பாட்டை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உறவினர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் வழக்கறிஞரை மாற்றுவீர்கள். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். ஆன்மிகச் சிந்தனை, பொது அறிவு, யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். யாருக்காகவும் பைனான்ஸில் பணம் வாங்கித் தரவேண்டாம். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். உங்களின் கையெழுத்திட்ட வங்கிக் காசோலையையும், சொத்துப் பத்திரத்தையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காதீர்கள். இந்த ஆண்டு முழுக்க ராகு 4 ஆம் வீட்டிலும், 10 ஆம் வீட்டில் கேதுவும் அமர்கிறார்கள். 4 ஆம் வீட்டில் ராகு அமர்வதால் தாயாருக்கு நெஞ்சு வலி, சர்க்கரை நோய் வரக்கூடும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும்.

வீடு வாங்கும் போது சொத்துக்குரிய தாய்பத்திரத்தை கேட்டு வாங்குங்கள். 10இல் கேது அமர்வதால் வேலைச்சுமை,




## நினைத்த காரியம் நிறைவேறும்!

வீண்பழி வந்துசெல்லும். சில காரியங்களை போராடி முடிக்க வேண்டி வரும். சந்தேக புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். சனிபகவான் இந்த வருடம் உங்கள் இராசிக்கு 3 ஆவது வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் சவாலான காரியங்களையும் சாதாரணமாக முடிப்பீர்கள். அனுபவ அறிவை பயன்படுத்தி சில பிரச்சினைகளுக்கு எதார்த்தமான தீர்வு காண்பீர்கள். வேற்றுமதத்தினர் உதவுவார்கள். வழக்கால் பணம் வரும். எதிர்பார்த்த விலைக்கு பழைய சொத்தை விற்பீர்கள். வியாபாரிகளே! மார்ச், மே மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். நவம்பர், டிசெம்பர் மாதங்களில் லாபம் இரட்டிப்பாகும்.

சொந்த இடத்துக்கு கடையை மாற்றுவீர்கள். போட்டியாளர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அதிரடியாக செயற்படுவீர்கள். தள்ளிப் போன வியாபார வாய்ப்புகள் மீண்டும் கிடைக்கும். பெரிய நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியில் இறங்கி அதிக லாபம் ஈட்டுவீர்கள். ஏற்றுமதி,இறக்குமதி,சிமெண்ட், செங்கல், உணவு வகைகளால் பெரும் பணம் சம்பாதிப்பீர்கள். கூட்டுத் தொழிலில் பிரச்சினை தந்த பங்குதாரரை மாற்றுவீர்கள். புதிய யுக்திகளைக் கையாண்டு, வாடிக்கையாளர்களைக் கவருவீர்கள்.

உத்தியோகத்தர்களே! அதிகாரிகளால் பந்தாடப்பட்ட நிலை மாறும். செல்வாக்கு இருந்தும் நீங்கள் விரும்பிய இடம் மாற்றம் கிடைக்காமல் திண்டாடிய நிலை இனி மாறும். மே, டிசெம்பர் மாதங்களில் புது சலுகைகள், சம்பள உயர்வு உண்டு. மேலதிகாரியிடம் இருந்து வந்த கருத்து மோதல்கள் விலகி நட்புறவாடுவீர்கள். உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். இந்த புத்தாண்டு உங்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதாகவும், வசதி, வாய்ப்புகளையும் தருவதாகவும் அமையும்.

பரிகாரம்: ஈஸ்வரரை சென்று வணங்குங்கள். காது கேளாதவர்கள், வாய் பேச இயலாதவர்களுக்கு உதவுங்கள். பிணிகள் அகலும்.



பிறர் செய்ய முடியாத சவாலான காரியங்களை ஏற்று சாதித்துக் காட்டுவதில் வல்லவர்களான நீங்கள், சிறந்த பேச்சாளர்கள். அனைவரையும் அரவணைத்து செல்ல வேண்டுமென்பதில் ஆர்வம் காட்டும் நீங்கள், அன்பின் அடையாளமாக இருப்பவர்கள். ராசிக்கு லாப வீட்டில் சுக்கிரனும், புதனும் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் உற்சாகமாக பல வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் வி.ஐ.பிகளிடமிருந்து கிடைக்கும். வீடு கட்ட பிளான் அப்ரூவல் ஆகும். வங்கிக் கடனுதவியும் கிட்டும். வழக்கு சாதகமாகும். கணவர் உங்களுக்கு முழு சுதந்திரம் தருவார். பிள்ளைகளின் பொறுப்பற்ற போக்கு மாறும். உங்கள் ஆலோச னைகளை ஏற்றுக் கொள்வார்கள்.

புத்தாண்டு பிறக்கும் போது குரு பகவான் உங்கள் இராசிக்கு 4 ஆம்வீட்டில் அமர்ந்திருப்பதால் இனந்தெரியாத கவலைகள் வந்துப் போகும். தாயாருக்கு கை, கால் வலி, சளித் தொந்தரவு வந்து நீங்கும். வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். செலுத்த வேண்டிய வரிகளை தாமதப்படுத்த வேண்டாம். புதியவர்களை நம்பி பழைய நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். சித்தர்களை சந்தித்து அருள் ஆசி பெறுவீர்கள். நெருக்கமானவர்கள் சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள். அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடுவதால் வீண்பழிக்கு ஆளாவீர்கள்.

வாகனத்தை கொஞ்சம் கவனமாக இயக்குங்கள். விபத்துகள் நிகழக் கூடும். மன அமைதி பெற ஆன்மிகம், யோகா, தியானத்தில் ஈடுபடுவது நன்மை பயக்கும். குரு பகவான் 1.5.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டிலேயே தொடர்வதால் பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேர்வீர்கள். வறண்டிருந்த பணப்பை கொஞ்சம் நிரம்ப ஆரம்பிக்கும். நீண்ட காலமாக தடைப்பட்டிருந்த காரியங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும். கல்வியாளர்கள், ஆன்மிகவாதிகளின் நட்பு கிடைக்கும். தாயாருக்கு இருந்த நோய் குணமாகும். அவருடன் இருந்து வந்த கருத்து மோதல்களும் விலகும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். பிள்ளைகளின் சாதனைகளால் மதிப்பு, மரியாதை கூடும்.

அவர்களுக்கு எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில் உயர்கல்வி அமையும். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். மகளுக்கு ஏதோ ஒரு வகையில் தடைபட்டுக் கொண்டிருந்த திருமணம் இப்போது கூடிவரும். மகன் குடும்ப சூழ்நிலை அறிந்து பொறுப்பாக நடந்து கொள்வார். விலகிச் சென்ற சொந்த - பந்தங்கள் மனம்மாறி வலிய பேசுவார்கள். வாடகை வீட்டிலிருந்து சொந்த வீட்டுக்கு குடிபுகுவீர்கள். சொத்து விடயங்களில் இருந்து வந்த சிக்கல்களுக்கு அதிரடியான தீர்வு காண்பீர்கள். மூத்த சகோதரர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு கைநிறைய சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்கும். வெளிநாட்டினரால் திடீர் திருப்பங்கள் ஏற்படும்.

இந்த வருடம் முடிய உங்கள் இராசிக்கு 3 இல் ராகுவும், 9 ஆம் வீட்டில் கேதுவும் அமர்கிறார்கள். இராசிக்கு 3 ஆம் வீட்டில் ராகு அமர்வதால் சொத்து வாங்குவீர்கள். பெரிய பதவிகள் தேடி வரும். சவால்களை சமாளிக்கும் மனோபலம் அதிகரிக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். இளைய சகோதர வகையில் இருந்த மனத்தாங்கல் நீங்கும். அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். வழக்குகள் சாதகமாகும்.9 ஆம் வீட்டில் கேது அமர்வதால் தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். அடிமனதில் இருந்து வந்த கவலைகள் நீங்கும். தூக்கம் வரும். கொடுக்கல் - வாங்கலில் இருந்த சிக்கல்கள் தீரும். தந்தையாரின் உடல் நலம் பாதிக்கும். அடிக்கடி வெளியூர் பயணம் செல்ல வேண்டி வரும். உங்களை




உதாசீனப்படுத்தியவர்கள் அனைவரும் உங்கள் உதவியை நாடி வருவார்கள். நீண்டகால கனவான வீடு, மனை வாங்கும் திட்டம் நிறை வேறும்.சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். சாதுக்கள் உதவுவார்கள். நீண்ட நாளாக இழுபறியாக இருந்த வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். யாரையும்நம்பி உங்கள் வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். நீங்களே களத்தில் இறங்கி வேலை செய்வது நல்லது. இல்லத்துக்கு தேவையான நவீன மின்னணு சாதனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வருட ஆரம்பம் முதல் வருடம் முடியும் வரை பாதச் சனி தொடர்வதால் வீண் அலைச்சல், டென்ஷன் வந்துப் போகும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். சில விடயங்களுக்கு உணர்ச்சிவசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப் பாருங்கள். அடுக்கடுக்கான வேலைகளால் ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். ஆன்மிகத்தில் மனம் லயிக்கும்.

வெளிமாவட்டப்புண்ணிய தலங்களுக்கு சென்று வருவீர்கள். மனதில் இனம் புரியாத கவலைகள் வந்து போகும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகளும் அதிகரிக்கும். உங்கள் நிலை தெரியாமல் உறவினர்கள், நண்பர்கள் சிலர் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். பணம், நகையை கவனமாக கையாளுங்கள். வழக்கில் வழக்கறிஞரை மாற்றுவீர்கள். வியாபாரிகளே! பெரிய அளவில் முதலீடுகள் செய்ய வேண்டாம். ஏப்ரல், மே மாதங்களில் பாக்கிகள் வசூலாகும். புதுத் தொடர்பு கிடைக் கும். வேலையாட்களால் மறைமுகப் பிரச்சினைகள் வந்து நீங்கும். ஜூன் மாதத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உணவு, மருந்து, இரும்பு, பிளாஸ்டிக் வகைகளால் ஆதாயம் பெருகும்.ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் அரசால் ஆதாயம் உண்டு. கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் தொந்தரவு கொடுத்தாலும் நிதானத்தை தவறவிடாதீர்கள்.

உத்தியோகத்தர்களே! வேலைச் சுமை அதிகமாகும். மேலதிகாரி உங்களை தவறாகப் புரிந்துக் கொள்வார். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுவதற்கு முன்பாக நிதானிப்பது நல்லது. சட்டத்துக்கு புறம்பான வகையில் யாருக்கும் உதவ வேண்டாம். மே, ஜூன் மாதங்களில் வேற்றுநாட்டு நிறுவனங்கள் மூலம் புது வாய்ப்புகள் வரும். ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் சம்பளம், சலுகை கூடும். சக ஊழியர்கள் மதிப்பார்கள். இந்த வருடம் வேலைச் சுமையையும் திடீர் பயணங்களையும் தந்தாலும் பணவரவையும் புகழ், கௌரவத்தையும் தருவதாக அமையும்.

## அன்பின் அடையாளமாக இருப்பவர்கள்!

பரிகாரம்: ஸ்ரீபிரத்யங்கரா தேவியை சென்று வணங்குங்கள். செங்கல் சூளை அல்லது கல்குவாரியில் வேலை செய்யும் கூலித்தொழிலாளிக்கு உதவுங்கள். எதிர் பார்ப்புகள் நிறைவேறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## அகஸ்தியரின் ஜனன தினமான மார்கழி ஆயிலிய நட்சத்திர தினத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்ற வாரத் தொடர்ச்சி..)

தென் திசைக்கு வந்த அகத்தியன் பொதிகை மலையிலே தங்கி முருகக் கடவுளின் ஆணைப்படி அகத்தியன் எனும் நூலை இயற்றினார்.

இராமபிரானுக்கு சிவ கீதை போதித்தவர் அகத்தியர்.

சிவபூசை செய்வதற்காக கமண்டலத்தில் அகத்தியர் கொண்டு வந்த கங்கைநீரை விநாயகர் காகமாக உருக் கொண்டு சாய்த்து விட கமண்டலத்தில் இருந்து வடிந்து ஓடிய நீரே காவேரி ஆறு ஆனது. இலங்கை மன்னர் இராவணனை தம் இசைத்திறத்தால் வென்றார்.

அகத்தியர் இந்திர சபைக்குச் சென்ற போது இந்திரன் ஊர்வசியை நடனமாடச் செய்தான். ஊர்வசி இந்திரன் மகன் சயந்தனிம் கொண்ட காதலால் தன்னிலை மறந்தாள். அதனால் அகத்தியர் சயந்தனையும் ஊர்வசியையும் பூமியில் பிறக்கும்படி சபித்தார்.

வாதாபி, வில்வளவன் எனும் அரக்கர் இருவரில் வில்வளவன் வேதியர் உருக்கொண்டு வழியில் செல்லும் வேதியர், முனிவர் முதலானவர்களை விருந்திற்கு அழைத்து வாதாபியை கறியாய் சமைத்துப் படைத்து வாதாபியைத் திரும்ப அழைக்க அவன் அவர்கள் வயிற்றைக் கிழித்து வெளியே வருவதால் அவர்கள் இறந்து போவார்கள்.

முனிவர்கள் இதனை அகத்தியரிடம் முறையிடவே அகத்தியன் அவர்களிடம் விருந்துண்ணச் சென்றான்.

வில்வளவன் உணவு படைத்துவிட்டு வாதாபே ஜீரணோபவ என்று வயிற்றைத் தடவ வாதாபி இறந்தான். நிலை அறிந்த வில்வளவன் அகத்தியரிடம் மன்னிப்புக் கோரினான். இவை போல் அகத்தியனைக் குறித்து புராணங்களில் உள்ள கதைகள் பற்பல.

அதங்கோட்டு ஆசான், துராலிங்கன், செம்பூனை செய, வையாபிகன், வாய்ப்பிசகன், பனமபாறன், கலாலிடிகோமன், அதவிநாயகர், பெரிய காக்கை பாடினி, நந்தத்தன், சிகண்டி, தொல்காப்பியன் ஆகிய 12 பேரும் "பன்னிருபடலம்" எனும் நூலை எழுதினார்கள்.

அகத்தியர் மருத்துவம் சார்ந்த பின்வரும் நூல்கள் எழுதியதால் சித்த மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுகின்றார். அவர் எழுதிய நூல்கள் ஆவன,

அகத்திய வெண்பா, அகத்திய வைத்தியக் கோம்மி, அகத்திய வைத்திய ரத்னாகரம், அகத்திய வைக்திய கண்ணாடி, அகத்திய வைத்திய 1500, அகத்திய வைத்திய சிந்தாமணி, அகத்திய கர்ப்பகத்திரம், அகத்திய ஆயுள் வேத பாஷ்யம், அகத்திய வைத்தியம் 4600, அகத்திய செந்துரம் 300, அகத்திய மணி 4000, அகத்திய வைத்திய நூல் பெருந்திரட்டு, அகத்திய பஷ்மம் 200, அகத்திய நாடி சாஸ்திரம், அகத்திய பக்ஷனி, அகத்திய கரிசில் பஷ்யம் 200, சிவசாலம், சக்திசாலம், சண்முக சாலம், ஆறெழுத்தந்தாதி, காமவியாபகம், விதி நூண் முவகை காண்டம், அகத்திய பூசாவிதி, அகத்தியர் சூத்திரம் 30, திருமந்திரம் 1500, அகத்தியர் சௌமிய சாகரம் 1200, அகத்தியர் வாத சௌமியசாகரம் 1200, அகத்தியர் வாத சௌமிய சாகரம் 1200, அகத்தியர் இலக்கிய சௌமியசாகரம் 1200, அகத்தியர் பரிபாஷை 500, அகத்தியர் பெருநூல் 12000, அகத்தியர் நயனவிதி, அகத்தியர் வைத்திய இரத்தின சருங்கம், அகத்தியர் இரணநூல், அகத்திய ஆயுள் வேதம் 1200, அகத்திய ஜாலசந்திர திரட்டு 500, அகத்திய ஞானம் 500, அகத்திய இரணவாகடம் 500, அகத்திய எடை பாகம் 400, அகத்திய அமுதகலைஞானம் 1200.

அகத்திய முனிவர் தமிழுக்கான முனிவர் என்





றும் சித்த மருத்துவ முறைகளை வழங்கிய முனிவர் என்றும் குறிப்பிடப்படுகின்ற இவரது பாடல்களில் பயின்று வந்துள்ள சொற்கள் இவரை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பதைத் தெரிவிக்கின்றன.

அகத்தியர் சிந்த வைத்தியத்திற்குச் செய்த பணி சிறப்பானது. பல நோய்களுக்கும் மருத்துவச் சந்தேகங்களுக்கும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவாள விளக்கம் கொடுத்துள்ளார். அகத்தியர் பெயரில் வெளியாகியுள்ள சமரச நிலை ஞானம் எனும் நூலில் உடம்பில் உள்ள முக்கியமான நரம்பு முடிச்சுக்கள் பற்றிய விளக்கம் காணப்படுகின்றது.

அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள் எனும் நூலில் பதினெட்டு வகையான மனநோய் பற்றியும் அதற்குரிய மருத்துவம் பற்றியும் விளக்கப்பட்டிருக்கின்றன. அகத்தியின் அஷ்டமாசத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் தோஷங்கள் பற்றிக் கூறியுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நங்குநேரி என்ற இடத்தில் உள்ள பெருமாள் ஆலயத்தில் உள்ள எண்ணெய்க் கிணறு அகத்தியரால் உருவாக் கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வெண்ணெய்க் கிணறு ஆலயத்தின் முன் பகுதியில் உட்பக்கமாக வடக்குப் பாகத்தில் அமைந்துள்ளது. இங்கு இறைவனுக்குத் தைலங்களில் அபிஷேகம் செய்வதாகவும் அவை கிணற்றில் வந்துசேரக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் இக் கிணற்றில் சேரும் தைலத்தை நோயாளிகள் வந்து பெற்றுச் செல்கின்றனர் எனவும் அறிய முடிகிறது. இத்தைலம் நாட்பட்ட தோற் பிணிகளுக்கு நல்ல பலனைக் கொடுப்பதாக அறிகிறோம். டாக்டர் ஆர்.ரி.தியாகராஜன் எழுதிய "சித்த மருத்துவம் சிறப்பு" என்ற நூலில் நங்கு நேரித்தைலம் என இதன் சிறப்புக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச பிரிவுக்குள் அமைந்த கங்குவேலி கிராமமே நினைவுச்சின்னம் ஆகும். கரைசயம்பதி பழையூர்ச்சேனை, கங்கைவேலி, அகத்தியர் ஸ்தாபனம் என பல பெயர்களினால் வழங்கப்படும். கங்குவேலியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கங்குவேலி ஆதிசிவன் ஆலயமும் ஞாபகார்த்த நினைவுச் சின்னமாக அகத்தியர் சிலையும் கல்வெட்டு நினைவுச் சின்னமாக கங்குவேலி அகத்தியர் தாபன சிவன் கோவிலும் விளங்குகின்றது .

அகத்தியர் பெருமை பற்றி தேவாரங்களும் சுட்டுகின்றன. எடுத்துக் காட்டாக சம்பந்தர், சுந்தரர், அப்பர், ஆகியவர் களின் தேவாரம் கீழ்க் கண்டவாறு குறிப்பிடப்படுகின்றன.

"சீரிணார் மணியும் மகில சந்தும் செறிவரை
வாளி நீர் வரு பொன்னி வட மங்கு லக்குடி
நீரின் மாமுனிவன் நெடுங்கை கோடு நீர்த்தனைப்
பூரித் தாட்டி அர்ச்சிக்க இருந்த புராணமே"
(சம்பந்தர்)

"வந்தோரிந்திரன் வழிபட மகிழ்ந்து
வான நாடு நீகள்கென அருளிச் சந்தி மூன்றிலும் தாபர நிறுத்தி
சிகளி செய்(து) இறைஞ்சு அகத்தியர் தமக்கு சிந்து மாமணி அணிந்த பொதியில்"
(சுந்தரர்)

"மாங்கலக்குடி ஈசனை மாகாளி
வெங்கதிர்செல்வன் விண்ணொடு மண்ணு நேர்
சங்கு சக்கர நாரி சதுர் முகன்
அங்கு அனத்தியனும் அர்ச்சித்தார் அன்றே"
(அப்பர்)

"அன்றாலின் கீழிருந்தங்கு அறம் சொன்னானை
அகத்தியனை உகப்பானை அயன்மால் தேட"
(அப்பர்)

மேற்குறிப்பிட்ட பாடல்களிலிருந்து அகத்தியர் திருமுறைகளில் சிறப்பிடம் பெறுவதைக் காணலாம். இதன் முலம் அகத்தியர் சைவசமய திருமுறைகளிலும் தமிழ் இலக்கியங்களிலும் தமிழ் மருத்துவமான சித்த மருத்துவத்திலும் முதன்மையானவராகத் திகழ்ந்துள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 372





அநுராதபுரத்துக்கு அவர் வந்து விட்டாரா, தெரியுமா?" என்று பார்த்திபேந்திரன் கேட்டான்.

"அதைப் பற்றியெல்லாம் எங்களுக்கு என்ன தெரியும், மகாராஜா! நாங்கள் காட்டு வழியில் வந்தோம்! காட்டில் ஒரு மதயானை என்னைத் துரத்திக்கொண்டு வந்தது! அப்போது பாருங்கள்."

"போதும் உன் கதை! யார் கண்டது? ஒரு நாளைக்கு உன்னை நானே கழுவில் தூக்கிப் போட்டு உன்னுடைய ஆசையை நிறைவேற்றினாலும் நிறைவேற்றுவேன்!" என்று சொல்லிக் கொண்டே பார்த்திபேந்திரன் குதிரையைத் திருப்பினான்.

ஆழ்வார்க்கடியான் பார்த்திபேந்திரனுடன் பேசியபடியே அவனுடனிருந்த ஆட்களையெல்லாம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

எல்லோரும் குதிரைகளைத் திருப்பிக்கொண்டு போன பிறகு ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனிடம், "தம்பி! அந்த மற்ற மூன்று ஆட்களையும் பார்த்தாயா? அவர்களில் யாரையாவது உனக்கு முன்னம் தெரியுமா?" என்று ஆவலோடு கேட்டான். "இல்லை, நான் பார்த்த தேயில்லை!" என்றான் வந்தி யத்தேவன்.

"ஆம், நீ பார்த்திருக்க முடியாதுதான். அவர்களில் இரண்டு பேரை நான் பார்த்திருக்கிறேன். திருப்புறம்பயம் பள்ளிப்படையில் நள்ளிரவில் பார்த்தேன்! அப்பா! என்ன பயங்கரமான சபதம் எடுத்துக் கொண்டார்கள்!" என்று கூறிய போது ஆழ்வார்க்கடியானுடைய உடம்பு முழுவதும் நடுங்கிற்று.

"அப்படி என்ன பயங்கரமான சபதம் எடுத்துக் கொண்டார்கள்?"

"சோழர் குலப் பூண்டே இந்த உலகில் இல்லாமல் அழித்து விடுவதாகச் சபதம் எடுத்துக் கொண்டார்கள்!"

"ஐயையோ!"

"இவர்கள் எப்படி நமக்கு முன்னால் இங்கு வந்து சேர்ந்தார்களோ தெரியவில்லை! கெட்டிக்காரர்கள்! இந்த முரட்டுப் பல்லவனை எப்படியோ பிடித்துக் கொண்டார்கள், பார்!" என்று சொல்லிவிட்டு ஆழ்வார்க்கடியான் மௌனமானான்.

வந்தியத்தேவனுக்குக் கோடிக்கரையில் அவன் அறிந்த ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. அவன் கோடிக்கரை வந்ததற்கு முதல்நாள்தான் இரண்டு பேர் அவசரமாக இலங்கைக்குப் போனார்கள் என்றும், பூங்குழலியின் தமையன் அவர்களைப் படகில் ஏற்றிச் சென்றான் என்றும் கேள்விப்பட்டான் அல்லவா. இவர்களில் அந்த இரண்டு பேரும் இருப்பார்களோ? அப்படியானால் பார்த்தி பேந்திரனுக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?

நால்வரும் தம்பள்ளை என்னும் புத்த புண்ணிய க்ஷேத்திரத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

## இருபத்தொன்பதாம் அத்தியாயம்
## யானைப் பாகன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தக் கதை நடந்த காலத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், வலஹம்பா/ஹ என்னும் சிங்கள அரசன் ஒருவன் இருந்தான். அவனுடைய காலத்திலும் தமிழர் படை இலங்கையின் மீது படையெடுத்துச் சென்றது. அப்போது வலஹம்பா/ஹ என்பான் தலைநகரிலிருந்து தப்பி ஓடித் தம்பள்ளை என்னுமிடத்திலிருந்த மலைக் குகையில் ஒளிந்து கொண்டிருந்தான். பிறகு அவன் மீண்டும் படை திரட்டிக் கொண்டு சென்று அநுராதபுரத்தைக் கைப்பற்றினான். அவனுக்கு அபயமளித்திருந்த மலைக் குகையை மேலும் குடைந்தெடுத்துக் கோயிலாக்கினான். புத்தர் பெருமானிடம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காக அந்தக் குகைக்குள்ளே பெரிதும் சிறிதுமாய்ப் பல புத்தர் சிலைகளை நிர்மா ணிக்கச் செய்தான். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்


## குளிரில் நின்றால் பரிசு

(நேற்றைய தொடர்ச்சி...)

அப்படி நிற்கும் போது உனக்கு எந்த வகையிலும், ஏதாவது துணையாக இருந்ததா? என்றார் அக்பர். அந்த இளைஞனும் அப்பாவியாய் "அரசே அரண்மனையின் மேல் மாடத்தில் எரிந்து கொண்டிருந்த சிறிய விளக்கின் ஒளியை பார்த்துக் கொண்டே இரவுப் பொழுதை கழித்தேன்" என்றான்.

"இளைஞனே அதானே பார்த்தேன். நடுங்கும் குளிரில் தண்ணீருக்குள் எப்படி உன்னால் இருக்க முடிந்தது என்று இப்பொழுது புரிகிறது! உன் குளிரை போக்க அரண்மனையிலிருந்து வீசிய விளக்கின் ஒளி உனக்கு உதவி செய்திருக்கிறது.

அந்த சூட்டில் தான் இரவு முழுவது



நின் றிருக்கிறாய். எனவே உனக்கு ஆயிரம் பொற்காசுகள் கிடையாது" என்றார்.

பரிசுத்தொகை கிடைக்கவில்லை என்றதும் அந்த இளைஞன் மிகவும் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றான். பீர்பால் அவனை கண்டு என்னவென்று விசாரிக்க. இளைஞனும் பீர்பாலிடம் எல்லாவற்றையும் சொன்னான். பீர்பால் அவனுக்கு ஆறுதல் கூறி பரிசு தொகையை கிடைக்க உதவி செய்வதாக உறுதியளித்தார்.

சில நாட்களுக்கு பிறகு அக்பர் வேட்டை யாட புறப்பட்டுக்கொண்டிருந்தார். பீர்பாலை தம்முடன் அழைத்து செல்ல எண்ணிய அக்பர் காவலாளியை கூப்பிட்டு பீர்பால் வீட்டுக்கு சென்று அழைத்து வரச்சொன்னார். பீர்பால் தன்னை தேடி வந்த காவலாளியிடம் தான் சமையல் சென்று கொண்டிருப்பதையும், சாப்பிட்டு விட்டு வருவதாகவும் கூறினார். நீண்ட நேரம் பீர்பாலுக்காக அக்பர் காத்திருந்தார். பீர்பால் வரவில்லை. மிகவும் கோபமடைந்த அரசர் பீர்பாலின் வீட்டுக்கு சென்று பார்த்துவிட்டு வரலாம் எனப்புறப்பட்டார். பீர்பால் வீட்டில் ஒரு பாத்திரத்தில் அரிசியை போட்டு தண்ணீர் ஊற்றி வைத்திருந்தார்.

பாத்திரத்தி . லிருந்து பத்தடி தூரம் தள்ளி அடுப்பை வைத்திருந்தார். அடுப்பில் விறகுகள் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. இதை கண்ட அக்பருக்கு ஒன்றும் புரியவில்லை. பீர்பாலிடமே கேட்டார்.

"பீர்பால் தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" அக்பர்.

"அரசே சமையல் செய்து கொண்டிருக்கிறேன்" பீர்பால்.

"உமக்கு என்ன மூளை குழம்பி விட்டதா? பாத்திரம் ஒரு பக்கம் இருக்கிறது. அடுப்பு ஒரு பக்கம் இருக்கிறது. அதில் எப்படி சோறு வேகும்?" என்றார் அக்பர் கோபத்துடன்.

"அரசே நிச்சயம் சோறு வேகும் யமுனை ஆற்றில் தண்ணீரில் இருந்தவனுக்கு அரண்மனையில் இருந்த விளக்கின் வெளிச்சம் சூட்டை தந்திருக்கும்போது மிகவும் பக்கத்தில் இருக்கிற அடுப்பில் ஏற்படும் சூடு அரிசி பாத்திரத்தில் பட்டும் சோறு வெந்து விடாமல் போகுமா?' என்றார் பீர்பால்.

மிகவும் நாசுக்காக தமக்கு புரிய வைத்த பீர்பாலை பாராட்டி அந்த இளைஞனை வரவழைத்து முன்பு கூறிய படியே ஆயிரம் பொற்காசுகளை கொடுத்தார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளில் தேங்கிக்கிடப்பதே
முன்னேற்றத்திற்கான முக்கிய தடையாகும்.
~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒருபுறம் போதை மறுபுறம் டெங்கு

ஒருபுறம் வேடன். மறுபுறம் நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான் என்பது அந்தக் காலத்துச் சினிமாப்பாடல்.

அன்று கோயில்களில் இடம்பெறும் "சின்ன மேளம்" நிகழ்ச்சியில் இந்தப் பாடலைப் பாடி அபிநயம் செய்வது வழமையாக இருந்தது.

அன்று சினிமாப் படத்துக்கான இந்தப் பாடல் இன்று நம் வாழ்க்கையில் நிதர்சன மாகிப் போயிற்று.

ஆம், ஒருபுறம் வேடன் மறுபுறம் நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான் என்ற நிலையில்தான் நம் வடபகுதித் தமிழ் மக்களின் நிலைமையுள்ளது.

உண்மை. ஒருபுறம் போதைவஸ்து. மறுபுறம் டெங்கு. இந்த இரண்டிலும் இருந்து தப்ப முடியாத ஏக்கத்தோடு வடபகுதி மக்கள் உள்ளனர்.

ஒருகாலத்தில் மிகுந்த கட்டுக்கோப்புடன் இருந்த நம் தமிழினம் இன்று சுயநலம் கொண்டவர்களிடமும் குறுக்குவழியில் பணம் ஈட்டுபவர்களிடமும் அகப்பட்டுக் கிடக்கிறது.

இதன் காரணமாக வடபகுதி இளைஞர்களை இலக்கு வைத்து, போதை வியாபாரிகள் களமிறங்கியுள்ளனர்.

அவர்களின் போதை வியாபாரத்துக்கு உயர்மட்டங்களும் வசதி படைத்தவர்களும் ஆதரவு வழங்குகின்றனர்.

இதனால் எத்தனையோ இளைஞர்கள் போதைக்கு அடிமையாகித் தங்கள் அருமந்த வாழ்வைத் தொலைத்துவிட்டுப் பரிதவிக்கின்றனர்.

தவிர, போதைக்கு அடிமையாகிப் போன பிள்ளைகளை நினைந்து நினைந்து உருகுகின்ற பெற்றோர்களின் அவலம் சொல்லிமாளா.

என்ன செய்வது. ஏதுமறியாத இளம் பிள்ளைகள் மத்தியில் போதைப்பொருள் திணிக்கப்படுகிறது.

இளைஞர்களிடையே போதைப் பாவனையை ஏற்படுத்தி, அதன்மூலமாகப் பணம் பறிக்கின்ற கொடுமை நடந்தாகிறது.

இதிலிருந்து தப்பிப் பிழைப்பது எங்ஙனம் என்று ஏங்கும் கால், காலத்துக்குக் காலம் ஏதோவொரு தொற்று நோய் நம்மைச் சூழ்ந்து பிடித்து உயிர் அச்சுறுத்தலைத் தருகிறது.

அந்தவகையில் நுளம்பினால் பரவுகின்ற டெங்குக் காய்ச்சல் இப்போது அனைவரையும் உலுப்பி நிற்கிறது.

அந்தோ! கொடுமை. வைத்தியசாலைகளில் டெங்கு நோயாளர்கள் நிரம்பி வழிகின்றனர்.

நோயாளிகளைப் பக்குவமாகப் பராமரிக்க வேண்டியது அவசியமாயினும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதன் காரணமாக, வைத்தியசாலை விடுதிகளில் டெங்கு நோயாளர்கள் நிலத்தில் உறங்குகின்ற பரிதாபத்துக்கு ஆளாகியுள்ளனர்.

எனினும் டெங்குக் காய்ச்சல் இதுவரை கட்டுப்பாட்டுக்கு வரவில்லை.

இங்குதான் வடபகுதி மக்கள் ஒருபுறம் போதைப்பொருள், மறுபுறம் டெங்குக் காய்ச்சல் என்ற உயிர்க்கொல்லிகளுக்கு நடுவில் அகப்பட்டு மீளமுடியாமல் தவிக்கின்றனர்.

# என்னைக் கொல்லவந்த பெண்ணை நான் மன்னித்துவிட்டேன் அவரை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுப்பேன் - டக்ளஸ்

என்னைக் கொலை செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பெண்மணியை தான் மன்னித்து விட்டதாகவும், அவரது விடுதலை தொடர்பில் சட்டமா அதிபருடன்கலந்துரையாடி, அவரது விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகக் கொண்டு, முன்பள்ளி ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான செ.சத்தியலீலா என்பவர், கடந்த 2004 ஆம் ஆண்டு, அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மீதான குண்டுத்தாக்குதல் தொடர்பில், அவசர காலச் சட்டவிதியின் கீழ் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு 14 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு இருந்தார்.

வழக்குவிசாரணையின் போது கொழும்பு மேன் நீதிமன்றம் இவருக்கு 15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட, இரண்டாண்டு கால சிறைதண்டனை மற்றும் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் 2018 ஆம் ஆண்டு விடுதலை செய்தது.

எனினும் மேன் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் திருப்தியுற்றிராத சட்டமா அதிபர் திணைக்களம் அத்தீர்மானத்தை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தது. மேன்முறையீட்டு நீதிமன்றமானது மேன் நீதிமன்றத் தீர்ப்பை நிராகரித்து,

அரசியல் கைதியான சத்தியலீலாவுக்கு 2023 இல் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

இந்நிலையில் அவர், மேன்முறையீட்டு நீதிமன்றம் தனக்கு அளித்த தண்டனைத் தீர்ப்பை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தி தன்னை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு உயர் நீதிமன்றில் மீண்டும் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இதேவேளையில் சத்தியலீலா, தமிழ் அரசியல்கைதிகளின்விடுதலைக்காக குரல் கொடுத்து வருகின்ற **"குரலற்றவர்களின் குரல்"** அமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு ஒரு கருணை மனுவினை அனுப்பி வைத்துள்ளார். அதில் அவர், என்னைப் பொறுத்தமட்டில் 14 வருடங்களாகப் பட்ட துன்ப துயரங்களுக்குப்பின்னரும் ஒரு மரணதண்டனைக் கைதியாக மீண்டும் சிறைக்குச்செல்வதை இந்த ஜென்மத்தில் நினைத்துப் பார்க்கவே முடியாது.

அதைவிட உயிரை மாய்த்துக் கொள்வதே மேல். எனவே, எனது பிள்ளைகளையும், பெற்றோரையும் பிரிந்து 14 ஆண்டுகாலம் சிறையில் வாடி விடுதலையான பின்பும் மரணதண்டனைத் தீர்ப்பிற்கு ஆளாகியுள்ள எனக்கு ஜனாதிபதி கருணை அடிப்படையில் பொது மன்னிப்பு வழங்கி எனது இயல்பு வாழ்விற்கு வழிவகுக்க வேண்டும்" என கோரிக்கை விடுத்திருந்தார்.

குறித்த கருணை மனு தொடர்பில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது, குரலற்றவர்களின் குரல் அமைப்பினால், ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்து.

இதன்போது, ஜனாதிபதிக்கு அருகிலிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "அந்தப் பெண்மணியை எப்பவோ நான் மன்னித்துவிட்டேன். ஆகையால், இந்த விடயம் சம்மந்தமாக நான், சட்டமா அதிபருடன் கலந்துரையாடி அவரது துரிதமான விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பேன்" என்ற உறுதிமொழியை வழங்கியுள்ளார். (ந-7)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தீர்க்கமான முடிவு அவசியம்

## செல்வம் எம்.பி. வலியுறுத்து

(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாக ஒரு முடிவை எடுக்க வேண்டும். சிவில் அமைப்புக்களுடனும், இலங்கைத் தமிழரசுக் கட்சியுடனும் இது தொடர்பில்பேசுவோம். கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் கட்சியுடனும் பேசுவதற்கு முயற்சிப்போம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார். வவுனியாவில் உள்ள ரெலோ அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், "ஜனாதிபதி அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்தார். இதன் போது நில அபகரிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக நாம் அவருடன் பேசியிருந்தோம். இன்னும் பல விடயங்களை பேசியிருந்தோம். நாம் கூறும் விடயங்கள் உடனடியாகத் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில் சென்றிருந்தோம். ஆனால், அது நடைபெறவில்லை.

நாங்கள் கேட்ட விடயங்களுக்கான சரியான பதிலை அவர் தரவில்லை. சம்பிரதாயபூர்வமான ஒரு கூட்டமாகவே அது இடம்பெற்றது. பல அபிவிருத்திகள் அறிவிக்கப்பட்டாலும் கூட அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

இதேவேளை, ஜனாதிபதி வந்து சென்ற பின்னர் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இராணுவ முகாம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அது என்ன தேவைக்காக அமைக்கப்பட்டது என்ற விடயம் தெரியவில்லை. எமது மக்களை அச்சுறுத்துவதற்கான செயற்பாடே அது. ஏற்கனவே பொலிஸ் சோதனைச் சாவடி அங்கு இருக்கின்றது. இந்நிலையில், இராணுவத்தின் தேவை என்ன என்று புரியவில்லை. இது தொடர்பாக நாம் பாராளுமன்றிலும் ஜனாதிபதியிடமும் பேசுவோம். இது அகற்றப்பட வேண்டிய முகாம். சிவில் நிர்வாகம் என்பது பொலிஸாரிடம்தான் ஒப்படைக்கப்பட வேண்டும். ஜனாதிபதியின் வவுனியா வருகையின்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது ஆதங்கத்தைப் போராட்டத்தின் மூலம் வெளிப்படுத்தினர். இதன் போது கைது நடவடிக்கை இடம்பெற்றிருந்தது. காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவர் கைது செய்யப்பட்டார். இது கண்டிக்கப்பட வேண்டியவிடயம் என்றார். (ந-7)

# ஐ.தே.க ஆதரவாளர்களுடன் யாழில் ஜனாதிபதி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது

குறித்த கலந்துரையாடலில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டதோடு ஜனாதிபதிக்கு நினைவு பரிசில்களையும் கோரிக்கைக் கடிதங்களையும் வழங்கி வைத்தனர்.

குறித்த கலந்துரையாடலில் கலந்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

தற்பொழுது நம் அனைவருக்கும் உள்ள மிகப்பெரிய சவால், பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்துவது, அத்தோடு வடபகுதியில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி பொருளாதாரத்தினை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

குறிப்பாக வடக்கில் நான் வருகை தரும் போதெல்லாம் பிரச்சினை என்ன என கேட்கும்போது காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் தீர்வு என சில பிரச்சினைகளுடன் மாத்திரம் என்னிடம் அணுகுவார்கள்.

அதனை விடுத்து நாம் முன்னோக்கி செல்வதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றி தான் நான் ஆராய்கின்றேன்.

குறிப்பாக விவசாயத் துறையினை நவீன மயப்படுத்தி நவீன முறையிலான விவசாய முறைகளை விரிவுபடுத்துவதன் மூலம் தன்னிறைவு பொருளாதாரம் ஒன்றினை உருவாக்குவதே எமது நோக்கம்.

எனவே எதிர் வரும் காலங்களில் நாட்டினை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குப் பொருளாதாரத்தை மேம்படுத்தல் அவசியமானதாகும்.

அதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடைமுறைப்படுத்த இருக்கும் மக்கள் சபைகள் (ஜனசபா)

05

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### உள்ளூராட்சி சபைகளைத் தாபித்தல்

உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை வரையறுத்து அமைக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளைத் தீர்மானித்தல், அதற்கு உத்தியோகப் பெயர் ஒன்றை வழங்குதல், வர்த்தமானியில் பிர கடனப்படுத்துதல், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் ஆகியன மத்திய அரசாங்கத்தின் உள்ளூராட்சி சபைகளுக்குப் பொறுப் பான அமைச்சரால் மேற்கொள்ளப்படுகின்றன.


1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைய நிறுவப்பட்டுள்ள பிரதேச சபைகளின் நிர்வாக எல்லையானது கிட்டத்தட்ட "பிரதேச செயலகங்களின்" எல்லைகளுக்குச் சமனானதாகும். ஒரு குறித்த பிரதேசத்தினுள் ஒரு மாநகரசபையோ அல்லது ஒரு நகரசபையோ செயற்படுமாயின் அதன் (மாநகரசபை, நகரசபை) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த எஞ்சியுள்ள பிரதேசம் பிரதேச சபையாகப் பிரகடனம் செய்யப்படுகின்றது.

உதாரணமாக தென்மராட்சிப் பிரதேச செயலகமானது 60 கிராம சேவகர் பிரிவுகளையும் 130 கிராமங்களையும் கொண்டமைந்துள்ளது. மேலும் இப்பிரதேசம் சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை என்ற இரு உள்ளூராட்சி அலகுகளை உள்ளடக்கி உள்ளது. இதில் சாவகச்சேரி நகரசபை 11 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி 31.29 சதுரகி.மீ பரப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. மிகுதி 49 கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்ட 200.90 சதுரகி.மீ பரப்பு சாவகச்சேரி பிரதேச சபைக்குள் அடங்குகிறது.

ஆரம்பத்தில் பிரதேச சபையாக ஆரம்பமாகும் உள்ளூராட்சி அலகை காலப்போக்கில் நகர சபையாகவும், பின்பு மாநகர சபையாகவும் தரமுயர்த்திப் பிரகடனம் செய்வதற்குரிய அதிகாரம் மத்திய உள்ளூராட்சி அமைச்சருக்கு உண்டு. இரு ஆண்டுகளுக்கு முன் வவுனியா, திருகோணமலை, கேகாலை, புத்தளம் மற்றும் களுத்துறை நகர சபைகள் மாநகர சபைகளாக தரமுயர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பு: யாழ்ப்பாண மாநகர சபையின் தோற்றம்- 1861ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க பெருந் தெருக்கள் குழுக்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் கீழ் பெருந தெருக்கள் குழு என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டது. பின்னர், 1898 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உள்ளூர் சபைகள் கட்டளைச் சட்டவிதிகளுக்கு அமைய முதலாவது உள்ளூராட்சிச் சபை (Local Board) உருவானது. 1920 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்ராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 1921 ஆம் ஆண்டில் இது, நகரப்பகுதிச் சபை (Urban District Council) ஆகவும், பின்னர் 1940 இல், 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நகரசபையாகவும் தரம் உயர்த்தப்பட்டது. 1949 ஆம் ஆண்டில் இது மாநகரசபை ஆனது.

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த நிருவாக அதிகாரம் மற்றும் மேற்பார்வை அதிகாரம் போன்ற பெருமளவு அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எனினும், உள்ளூராட்சி சபைகளின் கட்டமைப்பு தொடர்பான விடயங்கள் தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தின் கீழ் தக்க வைக்கப்பட்டுள்ளன.




### உள்ளூராட்சி சபைகளின் நோக்கம்


உள்ளூராட்சி மட்டத்தில் நிர்வாக மாற்றம், அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக முடிவுகளை எடுத்தல், நடைமுறையில் பயனுறும் வகையில் மக்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்களை வழங்கல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலங்கையில் உள்ளூராட்சி சபைகள் பொது நலன்கள் சார்ந்த துறைகளில், குறிப்பாக பொதுச்சுகாதாரம், கழிவகற்றல் போன்றவற்றிலும் சில சமூக சேவைகளிலும் ஈடுபட முடியும். பிரதேச மற்றும் நகர சபைகளை விட மாநகர சபைகளுக்கு மேற்படி விடயங்களை கையாள்வதில் அதிக அதிகாரம் உண்டு. எனினும், பிரதேச, நகர சபைகள் மக்களின் பங்களிப்புடன் கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் கணிசமான செல்வாக்கை செலுத்த முடியும். உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான மேலே கூறப்பட்ட சட்டங்கள், சரத்துக்களை விட இலங்கைக்கான பொதுவான சட்டங்களையும் உள்ளூராட்சி சபைகள் பயன்படுத்த முடியும். அதாவது அரசமைப்பு சட்டம், உள்ளூராட்சி தேர்தல் சட்டம், பொது நிர்வாகச் சட்டம், முகாமைத்துவ சட்டம், வரி செலுத்தும் வழி வகைகள் பற்றிய சட்டம், பொதுச்சுகாதாரம், பௌதிக திட்டமிடல், பொதுநலன் சேவைச்சட்டம் போன்றவற்றையும் இச் சபைகள் பயன்படுத்த முடியும்.

### இந்தியாவின் பஞ்சாயத்து முறை - ஓர் அறிமுகம்

ஜனநாயகம் என்பது ஓர் ஆட்சி முறை என்ற வகையில் அது வெற்றிகரமாக இயங்குவதற்கு மக்களின் பங்களிப்பு என்பது மிகவும் அவசியமானதாகும். அந்தவகையில் நவீன அரசுகள் கொண்டுள்ள பாரிய பிரதிநிதித்துவ நிறுவனங்கள் மூலமாக மக்களின் அரசியல் பிரச்சினைகளை வெற்றிகரமாக தீர்க்க முடியாத நிலையில் உள்ளூர் ரீதியாக உள்ள அமைப்புகளுக்கு அதிகாரத்தை வழங்கி அவர்கள் தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளத்தக்க வகையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதனை இன்றைய அனைத்து ஜனநாயக அரசுகளிலும் காணமுடியும்.

அந்தவகையில்மக்களால்உருவாக்கப்படுகின்ற அடிமட்ட அமைப்புகளுக்கு அதிகாரத்தை வழங்குவதன் மூலமாக மக்களின் அரசியல் பங்குபற்றுதலை உயர்த்த முடிவதுடன்மக்கள்தாம் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தமது திட்டங்கள் மூலமாகவே நிறைவேற்றிக் கொள்வதுடன் மத்தியிலிருந்து மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் பல்வேறு சுரண்டல்களுக்கு உற்பட்டு இறுதி மட்டத்திற்கு வருவதும் தடைப்படுகிறது. இதனால் அபிவிருத்தியும் துரிதப்படுத்தப்படுகிறது. இத்தகைய விடயங்களைக் கருத்திற் கொண்டு இந்திய யாப்புக்கு உள் வாங்கப்பட்ட விடயமே பஞ்சாயத்து இராச்சிய முறையாகும். ஓர் நாட்டில் மக்களின் பங்கேற்பின் மூலமாக ஜனநாயகத்தினை பலப்படுத்த உதவவும் இவ்விடயங்கள் உள்ளூர் சுயாட்சி எனவும் அழைக்கப்படுகின்றது. இந்தியாவைப் பொறுத்த வரையில் பஞ்சாயத்துக்கள் மன்னர்கள் காலமளவுக்கு பழமைவாய்ந்த விடயமாகும். சுதந்திர இந்தியாவிலும் மகாத்மா காந்தியினால் பஞ்சாயத்து முறைமை ஆதரிக்கப்பட்டது. மகாத்மாகாந்தியினது பார்வையில் சுதந்திரம் என்பது வெறும் அரசியல் சுதந்திரம் மட்டு மல்ல அவற்றைத் தாண்டிய கிராமிய, பொருளாதார, சமூக, அரசியல் சுதந்திரம் என்பதுதான் உண்மையான சுதந்திரம் என மகாத்மா காந்தி நம்பினார். இத்தகைய சுதந்திரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக கிராமங்களுக்கு அதிகாரத்தை வழங்கி கிராமிய சுயாட்சியை பலப்படுத்த வேண்டும் என்று கூறியதுடன் மகாத்மா காந்தி மட்டுமே அக்காலத்தில் கிராமிய சுயாட்சி பற்றி நம்பியவராகவும் காணப்பட்டார். ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாக திகழ வேண்டும் என்பது தான் அவரது எண் ணமாக விருந்தது. இதன் மூலமே பெற்ற சுதந்திரத்தை தக்கவைத் துக் கொள்ள முடியும் என்பதில் காந்தி நம்பிக்கை கொண்டிருந்தார்.

### உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரம் வழங்கல்




ஆயினும் இந்தியாவின் அப்போதைய நிலையினைக் கருத்திற் கொண்டு யாப்பினை வரைந்தோரால் மகாத்மா காந்தியின் சுயராச்சியம் (Swaraj) பற்றிய சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க முடியவில்லை. சுதந்திரமடைந்த போது சுதந்திர இந்தியாவினை வெளிநாட்டு அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்கவும் உள்ளூரில் காணப்பட்ட பல்வேறு அச்சுறுத்தல்களை சமாளிக்கும் வகையிலும் பலம் வாய்ந்த மத்திய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டதுடன் அதன் கீழ் மாநில அரசாங்கங்களையும் கொண்ட புதியதோர் வகையான சமஸ்டி முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர தினத்...

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகளையும், எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னதாக விடுதலை செய்ய வேண்டும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 4 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக வடக்கிற்கு வருகை தந்துள்ள நிலையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி கையெழுத்துக்கள் அடங்கிய மனுவொன்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் அவர்களால் கையளிக்கப்பட்டது.

இனங்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலவும் அரசியல் முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதன் போது வலியுறுத்தப்பட்டது. (ந-7)

## வடக்கின்...

வடக்குக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள றியோ குளிரகத்தில் மீட் அன்ட் கிரேட் (meet and Greet) எனும் தொனிப்பொருளில் அமைந்த சாதனையாளர்களது ஒன்று கூடல் நிகழ்வில் பங்கேற்றார்.

இந்நிகழ்வில் வடமாகாணத்தில் கல்வி, விளையாட்டு, நாடகம் மற்றும் திரைப்படக் கலை, சமூக ஊடகங்கள் போன்ற பலதுறைகளில் சாதனை படைத்தவர்கள் கலந்துகொண்டதோடு அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.(ந-7)

## எந்தத் தேர்தல்...

தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர், அடுத்து நடக்கப் போவது ஜனாதிபதி அல்லது பொதுத் தேர்தல் ஆகிய இரண்டில் எதுவாக இருந்தாலும் அதில் வெற்றியீட்டுவோம்.

ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டி நடத்தப்பட்டால் ரணில் நிச்சயமாக தோல்வி அடைவார்.

பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் தேசிய மக்கள் சக்தி அதில் வெற்றியீட்டி, ஜனாதிபதி தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கும்.

தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மத்தியில் காணப்படும் ஆதரவு காரணமாக எந்தத் தேர்தலை முன்கூட்டி நடத்துவது என்பதில் அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு சாதகமற்ற தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கே அரசாங்கம் விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## 1100 போதை...

யாழ்ப்பாணத்தில் போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த கும்பலை இலக்காக வைத்து முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் பிரபல மருந்தகம் ஒன்றின் ஊழியர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், மருந்தகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதும் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"யாழ்ப்பாணம் மாநகரத்தில் வியாபார நோக்கத்துடன் 1100 போதை மாத்திரைகளுடன் நடமாடிய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பிரபல மருந்தகத்தின் ஊழியர் என விசாரணையில் தெரியவந்தது.

அதனடிப்படையில் மருந்தகத்தில் முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் மேலும் இரண்டு பெட்டிகளில் சுமார் 250 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. குறித்த மாத்திரைகள் வலி நிவாரணியாக அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் இருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் மீதும் மருந்தகம் மீதும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விசாந்தவின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான மாவட்டக் குற்ற விசாரணை பிரிவினர் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ந-7)

## விசேட டெங்கு...

உள்ளடக்கி இந்த டெங்கு தடுப்பு வாரம் அமுல்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வேலைத்திட்டம் தொடர்பில் இன்று மக்களுக்கு அறிவிக்கப்படவுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அனோஜா தீரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## கடன்படு...

மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் சமீபத்திய ஆய்வு அறிக்கையில் இது தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொத்தக் கடனாளி குடும்பங்களில் உணவுக்காகக் கடன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 22.3 வீதமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் புனரமைப்பதற்கும் 53 ஆயிரத்து 200 குடும்பங்களும், வங்கிகளில் 97 ஆயிரம் குடும்பங்களும், நிதி நிறுவனங்களில் 2 இலட்சத்து 72 ஆயிரத்து 250 குடும்பங்களும், பணதரகர்களிடம் 3 இலட்சத்து 3 ஆயிரத்து 500 குடும்பங்களும் கடன் பெற்றுள்ளதாகப் பேராசிரியர் வசந்த அத்துகோரள மேலும் சுட்டிக் காட்டினார். (ந-7)

## போதை...

மருந்தகங்களில் வலி நிவாரண மாத்திரைகளைக் கொள்வனவு செய்து அதனைப் போதை மாத்திரைகளுக்குப் பதிலாகப் பயன்படுத்திய சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே மருத்துவரது பரிந்துரை சிட்டை இன்றி வலி நிவாரணிகளை அதிகளவில் வழங்க வேண்டாம் எனவும் இவ்வாறான காரியங்களுக்குத் துணைபோவதும் குறித்த மருந்துகளை அதிக விலைக்கு விற்பதும் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் மருந்துக் கடைகளின் உரிமையாளர்கள் கைது செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (ந-7)

## சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் 4 நாட்களில் மாத்திரம் 25 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த ஜனவரி 01ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரையில் மாத்திரம் 25,619 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளாக 5,060 பேர் ரஷ்யாவிலிருந்து வந்துள்ளனர். அதே நேரத்தில் 3,333 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபி விருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.


லக்கி 7 VIP — திகதி 2024.01.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0178 — Q 5 8 8 7 7 0 Q

தன நிதானய — திகதி - 2024.01.07 — சீட்டிழுப்பு இலக்கம் - 1382 — A 13 41 58 62 A — 07500

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3594 — சீட்டிழுப்பு திகதி 07.01.2024 — C 32 34 36 61 — C — 74337

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.01.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0661 — சிம்மம் 03 04 44 49 சிம்மம் — 38767 — 23

மஹஜன சம்பத — திகதி 2024/01/07 — சீட்டிழுப்பு இலக்கம் 5352 — U 1 4 4 3 0 8

மெகா பவர் — திகதி 07/01/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1700 — K 03 03 31 57 58 — 34985

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபதின சம்பத் — 07.01.2024 — வெற்றி வாரம் 060 — M 3 2 1 2 8 6 — 60418 — 25,825,875.20 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2326 — வர்ணம் செம்மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2024.01.07 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 01 19 28 47 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,667,973.60 — 26119

சனிதா — திகதி 2024.01.07 — வெற்றி வாரம் 4487 — 01 04 23 65 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,280,268.40 — 88546

சசிரி — வெற்றி வாரம் 425 — 2024.01.07 — கபிலம் — 06 21 31 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,796,800/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4038 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2024.01.07 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 08 14 47 51 — மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,199,432.40 — 451918

கப்ருக — Q 14 01 51 57 67 — 1502 — மஞ்சள் — 07.01.2024 — ஞாயிறு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 489,269,506.20

அத கோடிபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் : 2152 — சீட்டிழுப்பு திகதி : 2024.01.07 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,791,411.20 — 14 22 49 62 P — 525329


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-8100)

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-8100)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## Zoom மூலமான புலமை வகுப்பு ஆரம்பமாகிவிட்டன

தரம் : 03, 04, 05 ஆம் வகுப்புகளுக்கு

"வீட்டில் இருந்த படி கற்று சிறந்த பெறுபேறு எடுப்பதற்கான ஒருவழி" (18506)

100 வினாத்தாள்கள் வகுப்பில் விளங்கப்படுத்தப்படும்.

077 83 43 666

## விற்பனைக்கு

தேக்கு அலுமாரி, முதிரை அலுமாரி, யன்னல், மேசைகள் என்பன விற்பனைக்கு உண்டு. (18542)

077 873 0129

## தேவை

- வாணிஸ் வேலை
- காப்பன்ரெர் வேலை
- பன்னிரிக் கபெட் வேலைக்கு ஆட்கள் தேவை.

நிரந்தர வேலை (யாழ்ப்பாணம்) (18550)

076 821 9414


# திடீர் வலிப்பு பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

திடீரென வலிப்பு ஏற்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குடும்பப் பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்துள்ளார்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ராசா விஜயராணி (வயது 63) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கு கடந்த 28 ஆம் திகதி திடீரெனவலிப்பு ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மூளையில் இரத்தக் கட்டி உறைந்ததே அவரது மரணத்துக்கு காரணம்என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18515)

076 825 7716 (ஆகாஸ்)

## யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்)
மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)
தொடர்புகளுக்கு :
+447963743585(Whatsapp)
021 222 7141(Srilanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk (18434)

யாழ் நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருடம் அனுபவம் வாய்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க



எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி வழங்கவுள்ளோம்.

- 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாளிற்கான விலை நிலைவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம் (C-4099)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



அமரர்

## திருமதி தவராசா தவமணி

[ திதி : 08.01.2024 ]

கண்களில் நித்தம் ஈரம் – ஒவ்வொரு கணப்பொழுது
களிலும் உங்களின் சோகம் !!!
ஓராண்டு காலம் உருண்டோடி விட்டது . உங்கள்
நினைவோ , மனதை நெருடுது !!!

காலனும் தன் கைகளை நீட்டிட காரிருள் வழியே
நீங்கள் நடந்தீர்களே !!!
நீங்கள் விண்ணில் கலந்திட்ட நாள் முதல் எம் விழிகள்
உறங்க மறுக்கிறது அம்மா !!!

இல்லறம் எனும் நல்லறம் கண்டு செல்வங்களாய்
மூவரைப் பெற்றீர்
கண்ணுக்குள் மணியாய் இமைபோலக் காத்தீர் !!!

பெற்ற செல்வங்களுக்கு கல்வி எனும் பெரும்பேற்றுடன்.
அன்பு , கருணை , பண்பு என
அனைத்தையும் கற்றுத் தந்து . எமைப்பேணி
வளர்த்தீர்களே ! எமதருமை அம்மாவே!!!

கூடிக்கழித்த நாட்களதனை கடிகார முட்களை பின்
திருகிப்பார்க்கின்றோம் கண்ணீராய்
நெஞ்சமதில் குத்துகிறதே உங்கள் நினைவு

அம்மாவின் பாசம் நித்தம் நித்தம் வேண்டும் வந்து
விடுங்கள் மீண்டும் வந்து விடுங்கள்
வாஞ்சையுடன் காத்திருக்கின்றோம்.

ஓராண்டு போனதை நம்பவில்லை எம் மனது.
மனதிலும் மீளவில்லை உம் அன்பான நினைவுகள்
படைத்தவன் அன்பு கொண்டு அழைத்திட்டான்
பதைபதைக்கின்றோம் நாம் துடுப்பிழந்த படகுகளாய் !

எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்
துயில் கொண்ட எமதருமை அம்மாவே உங்கள் ஆத்மா
ஆண்டவன் அடியில் சாந்தி பெற பிரார்த்திக்கிறோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

(18487)

என்றும் நீங்கா உங்கள் நினைவலைகளுடன் ஏங்கித் தவிக்கும்
ஆருயிர் பிள்ளைகள் , அன்பு மருமக்கள் , பேரப்பிள்ளைகள் , சகோதரர்கள்

குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. 0094707872828

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org